# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: XIII இதழ்: 2 | ஆகஸ்ட் 2026 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XIII Issue: 2 | August 2026 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




நீட் தேர்வும் மாணவர்கள் மனநிலையும்!

கனிவான மருத்துவ சேவையில் கண் மருத்துவர் மதுரை ஸ்ரீனிவாசன்!

வெற்றி பெறுவது அரிது! அதை தக்க வைப்பது எளிதல்ல!

- ஆசிரியர் கடிதம்

பூரி ஜெகன்நாதருக்கு 56 வகை பிரசாதங்கள்

ஆரோக்கியத்தை பாதுகாக்கும் இயற்கை பழச்சாறு!

தலைநகர் அரசியலை தடம் மாற்றும் தமிழக அரசியல்!




# வெற்றி பெறுவது அரிது! அதை தக்க வைப்பது எளிதல்ல!



அன்புடையீர் வணக்கம்!

மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற எண்ணம் உண்டு. அது எந்த துறையாக இருந்தாலும் ,அதில் வெற்றி பெற வேண்டும் என்பதை இலக்காக வைத்துக் கொண்டு எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

நடக்கத் தொடங்கும் குழந்தை அடிக்கடி தடுமாறி கீழே விழுந்து அழும். ஆனால் சில நிமிடங்களிலேயே மீண்டும் எழுந்து நடக்க முயற்சிக்கும். பேசிப் பழகும் போதும், தப்பும் தவறுமாகப் பேசும். ஆனால் நாளடைவில் நன்றாகப் பேசி விடும்.

சிறிய வயதில் சைக்கிள் மிதித்து வண்டி ஓட்ட கற்றுக் கொள்ளும் போது பலமுறை கீழே விழுந்து காயங்கள் பட்டிருக்கிறோம். ஆனால் அந்த காயத்தை மறந்து தொடர்ந்து பயிற்சி செய்கிறோம் .அந்த காயத்தின் மீது கவனம் இருந்தால் பயிற்சியில் தொடர மனம் இடம் தராது. அந்த முயற்சியை கைவிட்டு விடலாமா என்று நினைக்கத் தோன்றும் .ஆனால் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்போது சிறு

சிறு தடங்கல்கள் வரும்போது அதை தட்டி விட்டு முன்னேறுவது தான் வெற்றிக்கு முதல் படி என்பதை சிறுவயதில் இருந்து கவனித்து வருகிறோம்.

வெற்றி தேடி செல்லும்போது ஆரவாரம் இருக்கக்கூடாது. அது போகின்ற பாதையை திசை திருப்பி விடும் எனவே மன அமைதி என்பது வெற்றியை நோக்கி நாம் ஓடுவதற்கான ஊக்கசக்தி.கோபத்தில் எடுக்கப்படும் பல முடிவுகளில் வீழ்ச்சிக்கு காரணமாகின்றன.எனவே மன அமைதியை கடைபிடியுங்கள்.எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள் அல்லது மகிழ்ச்சியாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு திட்டத்தை தொடங்கும் போது அது தனிப்பட்ட ஒரு மனிதனால் மட்டுமே வெற்றி பெற முடியாது. பலரின் ஒத்துழைப்பு இல்லாமல் அது வெற்றி பெற வாய்ப்பு இல்லை. அப்படி நம்முடைய திட்டத்திற்கு பலரை உபயோகப்படுத்தும் போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மன நிலை இருக்கும் அவர்களை நம் பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காக எடுக்கின்ற முயற்சிகள் சில நேரங்களில் வீணாக போய்விடும். ஏனென்றால் நம்முடைய மன ஓட்டம் வேறு. அவர்களின்



மனச் சிந்தனை வேறு. இல்லை நான் சொல்படித்தான் இது நடக்க வேண்டும் என்று நீங்கள் பிடிவாதம் பிடிக்க இல்லை நான் இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறேன் என்று அவர் சொல்ல இது ஒரு முடிவுக்கு வராமல் நின்று விட கூடும். எனவே உங்களுக்கு தெரிந்த விஷயம் என்றாலும் உங்கள் திட்டத்திற்கு இணைந்து வருபவர்களுக்கு அந்த விஷயம் தெரியாவிட்டால் அல்லது





தெரிந்து கொள்ள விரும்பாவிட்டால் எப்படியாவது அவரை உங்கள் தரப்பு நியாயங்களை ஒப்புக்கொள்கிற வரை பொறுமையை கடைப்பிடித்தல் அவசியம். பொறுமையும் வெற்றிக்கொரு காரணமாக சில நேரங்களில் அமைந்து விடுகிறது.

தன்னுடைய முயற்சி ,பிறருடைய முயற்சி, திட்டமிடல் ,சரியான அணுகுமுறை, தொடர் உழைப்பு ஆகியவற்றால் பெறுகின்ற வெற்றி அது தக்கவைக்கப்படும்போதுதான் நிரந்தரமான வெற்றியாளராக கருதப்படுவார்கள்.

போட்டிகள் நிறைந்த உலகத்தில் வெற்றியாளர்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் வெற்றியை தக்க வைப்பது சுலபமல்ல.



இதற்கு பல்வேறு உதாரணங்களை சொல்ல முடியும். குறிப்பாக திரைத்துறையில் ஒரு நடிகர் அல்லது ஒரு தயாரிப்பாளர் அல்லது ஒரு இயக்குனர் ஒரு படத்தை தயாரித்து வெற்றிகரமாக கொண்டு வந்து விட்டால், மீண்டும் அதே வெற்றி கிடைக்குமா என்பது பல நேரங்களில் சந்தேகமாகவே இருந்து விட்டிருக்கிறது. அதே நேரத்தில் வெற்றி பெற்று விட்டோம் என்கிற எண்ணத்தில் செய்கின்ற தவறுகள் தோல்வியை நோக்கி தள்ளிவிடும். வெற்றி பெற்ற பின்

வெற்றிக்கு முன்பாக எப்படி இருந்தோமோ அதைப்போல அதற்கு பின்பும் இருந்தால் மட்டுமே தான் அந்த வெற்றியை தொடர்ந்து கிடைப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

ஒரு மாணவன் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் எடுக்கின்ற மார்க்கை விட அடுத்த வருகின்ற 12ஆம் வகுப்பு பொதுத் தேர்தலில் கூடுதலாக எடுக்க வேண்டும் என்று அதிகமாக படிக்க வேண்டும்.

அந்த மாணவனுக்கு ஏற்படுகின்ற அந்த சவால்கள் தான் நமக்கும் ஒரு படிப்பினையாக பாடமாக அமையும். வெற்றி பெறுவோம் .பெற்ற வெற்றியை பாதுகாப்போம்.

- எம்.எஸ்.மூர்த்தி



# Mitra Homemakers Pvt.Ltd

## Cordially Invites You

With the blessings of the Almighty,
we warmly invite you and your family to join us for a



## SM Elite platinum project
## Special Pooja Ceremony

Your gracious presence will make this auspicious occasion even more meaningful as we come together to seek divine blessings, peace, prosperity, and happiness.

Date:
**Monday, 3rd August 2026**

Time:
**9 : 15 AM**

Venue :
**Aladipattiyan opposite, GST Road, Thrutheri, Singaperumal Koil, Chengalpattu - 603004**

Contact :
**9840399207 / 960069818 / 8122205034**

Mitra Homemakers warmly welcomes you to be a part of this sacred celebration. We look forward to sharing this blessed occasion with you and your loved ones.

**Your Presence Will Be Our Greatest Blessing.**

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 13 ஆகஸ்ட் 2026 டைம்ஸ்- 2

ஆசிரியர்/வெளியீட்டாளர்:
**திரு .எம். எஸ். மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்:
**திருமதி .சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்:
**மணவூர் கி.விடாரண்யம்**
9789837069

இதன் சிறப்பு ஆலோசகர்கள்:
Dr. **ஆ. தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
இயக்குனர் **மு.இரவீந்திரன் (எ) ரவி பார்கவன்**
**எஸ்.ரங்கராஜ்**
**ஆர் .சையது சித்திக்**

நிர்வாக அலுவலர்;
**ஆர். குணசேகரன்**

செய்தி இணை ஆசிரியர்கள்:
**மதுரை விஜா கண்ணன்**
**கோவை பி.முத்துராஜ்**
**சென்னை ராயபுரம் வி. குருசாமி**

**திருவள்ளூர் து.சண்முகம் எம் .ஏ**

சட்ட ஆலோசகர்;
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.பி.எல்.

செய்தியாளர்கள்:
**பி.வினோத்**
**பா. விஜயலட்சுமி**
**ராஜேஷ் கணேஷன்**

வடிவமைப்பு:
vidapublications@gmail.com

சந்தா மேலாளர்;
**வி.சுபத்ரா**
**9003107102**

அலுவலகம்:
001 இன்ஞ்சக்கல் பிளாக்
சித்ரா அவென்யு
9 சூளைமேடு ஹை ரோடு
சென்னை. 94
தொடர்புக்கு:
044-23744661,23743007/08
Mitra times 2015@gmail.com
www.mitraimes.com

# உள்ளே...




**நீட் தேர்வும் மாணவர்கள் மனநிலையும்!** 9


**வேண்டாத மரத்தை வெட்டாதீர்கள் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்புங்கள்!** 14


**அவமானங்களை தாங்கி நாப்கின் தயாரிப்பில் உலகப் புகழ் பெற்ற கோவை முருகானந்தம்!** 16


**நோய்கள் என்பது நோய்கள் அல்ல!** 21


**இ-மெயில் கண்டுபிடித்த ராஜபாளையம் சிவா அய்யாதுரை** 25


**உழைப்பும், ஒழுக்கமும் வெற்றியைத் தரும்!** 42

# தலைநகர் அரசியலை தடம் மாற்றும் தமிழக அரசியல்!



தமிழக சட்டமன்ற தேர்தல் முடிந்து முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த நிலையில் த.வெ.க. ஆட்சி அமைக்க போதுமான பெரும்பான்மை கிடைக்காத சூழலில் காங்கிரஸ் கட்சி முதன்முதலாக ஆதரவு கொடுத்தது தமிழக அரசியலை புரட்டி போட்டு விட்டது என்றே சொல்லலாம்.

ஏனென்றால் அதற்கு காரணம் அதுவரையில் திமுக_ காங்கிரஸ் கூட்டணி, நீண்ட காலமாக குறிப்பாக 2014 ,2019 ,2024 ஆகிய பாராளுமன்ற தேர்தலில் மோடி அலையில் காங்கிரஸ் கட்சி கரைந்து கொண்டு இருந்தபோது தி.மு.க. தமிழ்நாட்டில் 40 இடங்களையும் பெற்று , அகில இந்திய அளவில் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரின் எண்ணிக்கையில் கூடுதலாக காண்பிக்கப்பட்டது.

திருமதி .சோனியா காந்தி அவர்களின் நேரடி தலையீட்டின் பேரில் எந்த தொகுதி பங்கீடு சிக்கல் இருந்தாலும், அது பேசி தீர்வு காணப்பட்டது. கூட்டணிக்கு எந்த இடறும் இல்லாமல் சென்று கொண்டிருந்தது. அதே நேரத்தில் மாநிலத்தை ஆண்ட தி.மு.க., மத்தியில் ஆளும் பா.ஜக.வின் மீது தொடர்ந்து பல்வேறு பிரச்சனைகளில் எதிர்நிலை போக்கை கடைபிடித்தது. இது ஒரு கட்டத்தில் காங்கிரசுக்கு அடுத்தபடியாக தேசிய அளவில் தி.மு.க வும் பா.ஜ.கவிற்கு நேரடி எதிரியாக கருதப்பட்டது.

இதனால் மாநிலத்துக்கு வரவேண்டிய நிதி ஒதுக்கீடு ,திட்ட ஒதுக்கீடு ஆகியவற்றிற்கு முட்டுக்கட்டை போடப்பட்டன.

இந்த சூழலில் ஐந்தாண்டு கால தி.மு.க ஆட்சிக்கு பிறகு, 2026 தேர்தலில் கூட்டணி அமைப்பதில் மீண்டும் சிக்கல் ஏற்பட்டது. தமிழகத்தில் ஒரு பிரிவினர் ராகுல் காந்தியின் ஆசிர்வாதத்துடன் தி.மு.க.வுடன் கூட்டணி முடித்துக் கொள்ள வேண்டும் என்ற பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அதுமட்டுமல்லாமல் த.வெ.க.வுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இதன் பின்னணியில் இன்றைக்கு காங்கிரஸ் கட்சி தலைவராக இருக்கின்ற மாணிக் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி, தமிழக பொறுப்பாளர் கிரிஷ் ஷோடங்கர் கூட்டணி அமைந்த பின்னும் எதிர்மறையாகவே பேசி வந்தனர். குறிப்பாக ஆட்சியிலும் பங்கு அதிகாரத்திலும் பங்கு என்ற விஜய் எடுத்து வைத்த வாதம் சரியானது என்று சொல்லி த.வெ.க வுடன் இணக்கமான சூழ்நிலை ஏற்பட வைத்தனர். அதே நேரத்தில் விஜய் இரண்டு பேருக்கு

இடையே தான் போட்டி ஒன்று தி.மு.க, இன்னொன்று த.வெ.க. என்று தேர்தலை ஒரு குறிப்பிட்ட புள்ளியில் நிறுத்தினார். அதோடு திருநெல்வேலி தென்காசி மாவட்டங்களில் பிரச்சாரம் செய்யும் போது விஜய், "காங்கிரசுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து தன்னுடைய கூட்டணியில் மு. க. ஸ்டாலின் இணைத்துக் கொண்டார். ஆனால் உண்மையான காங்கிரஸ்காரர்கள் நம்மோடு தான் இருக்கிறார்கள்" என்று பிரச்சாரம் செய்தார். எனவே தி.மு.க ,காங்கிரஸ் நெடுங்கால கூட்டணி தாமரை இலை தண்ணீர் போல ஒட்டாமலே போய்விட்டது.



இந்நிலையில் தேர்தல் முடிவுகள் வந்தவுடன் முதல் கட்சியாக காங்கிரஸ் விஜய் ஆட்சிக்கு ஆதரவு தந்து பிள்ளையார் சுழி போட்டது. தங்களிடம் சொல்லாமல் போய்விட்டதாக கோபம் கொண்ட தி.மு.க, குறிப்பாக திமுக இளைஞர் அணி செயலாளர் முன்னாள் துணை முதல்வர் உதயநிதி காங்கிரஸ் மீது கடும் எதிர்ப்பை தெரிவித்து "இந்த பிரச்சனையை விடக்கூடாது காங்கிரஸ் கட்சிக்கு பாடம் கற்பிக்க வேண்டும்" என்று ஆவேசமாக கூறினார். இந்த நிலையில் பாராளுமன்றத்தில் இதுவரை காங்கிரஸ் கட்சியுடன் எதிர் வரிசையில் ஒன்றாக அமர்ந்து வந்த தி.மு.க தங்களுக்கு தனி இடம் பாராளுமன்றத்தில் வழங்க வேண்டும் என்று கேட்டு சபாநாயகருக்கு கடிதம் எழுதியது. இது தலைநகர் அரசியலில் ஆச்சரியமாக பார்க்கப்பட்டது.

சட்டமன்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி கடைசி வரை மு. க. ஸ்டாலின் அவர்களோடு பங்கேற்காதது , ராகுல் காந்திக்கும் தி.மு.க .மீது ஒரு வெறுப்பு இருந்ததை உணர முடிந்தது. போன பாராளுமன்ற தேர்தலில் கோவையில் பிரச்சாரம் செய்ய வந்த ராகுல் காந்தி சாலையின் குறுக்கே இருந்த தடையை தாண்டி குதித்து ஒரு ஸ்வீட் கடையில் ஸ்வீட் வாங்கி வந்து மு.க. ஸ்டாலினுக்கு கொடுத்தவர், இந்த தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்ட இடங்களில் மட்டும் பிரச்சாரம் செய்துவிட்டு தி.மு.க.வுக்கு "அல்வா" கொடுத்து விட்டார் என்று கிண்டலாக காங்கிரஸ்காரர்கள் சொல்ல ஆரம்பித்தார்கள்.

அதன் பின்பு விஜய் பதவியேற்பு விழாவில் ராகுல் காந்தி பங்கேற்றது, செங்கோட்டையன் பதவி ஏற்க வந்த போது விஜய் எழுந்த போது ராகுல் காந்தியும் எழுந்து நின்றது, எரியும் தீயில் எண்ணெய் ஊற்றி விட்டது போல ஆனது.

இனி எந்த காலத்திலும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைக்கக் கூடாது என்று திமுக முடிவு எடுத்த பின்னணியில் தலைநகர் அரசியல் தமிழக அரசியலால் தலைகீழாக மாறியது. மாணவர்கள் போராட்டத்தை காணச் சென்ற ராகுல் காந்தி தாக்கப்பட்டு ரத்தம் சொட்ட சொட்ட வேனில் ஏற்றப்பட்டார். இதற்கு எல்லா எதிர்க்கட்சிகளும் எதிர்வினை ஆற்றிய போது தி.மு.க .மட்டும் கண்டுகொள்ளவே இல்லை.

எனவே தமிழக அரசியலில் ஏற்பட்ட இந்த மாற்றம் தலைநகர் அரசியலிலும் தடம் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவாகிறது.

**- தம்பி முருகானந்தம்**



# நீட் தேர்வும் மாணவர்கள் மனநிலையும்!

நீட் (NEET) தேர்வு எழுதும் மாணவர்களின் மனநிலை கடும் அழுத்தம், பயம், மற்றும் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மை நிறைந்தது. தொடர் படிப்பு, மதிப்பெண் போட்டி, மற்றும் தேர்வு ரத்து போன்ற நிகழ்வுகள் இவர்களின் மனநலத்தை ஆழமாகப் பாதிக்கின்றன.

தேர்வு எழுதிய பிறகு முடிவுகளுக்காகக் காத்திருக்கும் வேளையில், திடீர் ரத்து அல்லது முறைகேடுச் செய்திகள் மாணவர்களை மீளாத் துயரத்திற்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாக்குகிறது.

தூக்கமின்மை, பசியின்மை அல்லது அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுதல், பதற்றம் (Anxiety), மற்றும் தாழ்வு மனப்பான்மை. பெற்றோரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமே என்ற குற்ற உணர்ச்சி மற்றும் கிராமப்புற மாணவர்களின் பொருளாதாரச் சூழல் தடைகள் ஆகியவை நீட் மீதான வெறுப்பு மன நிலை உருவாக்குகிறது.

இதேபோல நீட் தேர்வு ஏழை மாணவர்களை மருத்துவராக ஆக்கும் என்று ஒரு பக்கமும், நீட் தேர்வு கடுமையானது அதை ரத்து செய்ய வேண்டும் என்று ஒரு பக்கமும் பிரச்சாரம் நடைபெறுவதால் இதில் எந்த பக்கம் நிற்பது என்று மாணவர்கள் மனதில் குழப்பம் ஏற்படுகிறது.

இந்தியாவில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் போன்ற படிப்புகளில் சேர நீட் (NEET) தேர்வு உருவாக்கப்பட்டதற்கான முக்கியப் படிகள்: 2010ல் இந்திய மருத்துவக் கவுன்சில் (MCI) மூலம் திட்டம் தொடக்கம், 2013ல் முதல் பொதுத்தேர்வு அறிமுகம், மற்றும் 2016ல் உச்ச நீதிமன்ற தீர்ப்பால் நாடு முழுவதும் கட்டாயமாக்கப்பட்டது.

இதற்கிடையில் 2016 ஆம் ஆண்டு ஜெயலலிதா நடத்திய சட்டப் போராட்டத்தின் பலனாக நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனால் தமிழ்நாட்டு மாணவர்கள் நீட் தேர்வுக்கு அவசியம் இருக்காது என்ற மன நிலைக்கு ஆளானார்கள்.

அவ்வப்போது அரசியல்வாதிகள் நீட் தேர்வு ரத்து செய்வதற்கான போராட்டங்கள் நடத்தபோது அந்தப் போராட்டத்தின் வீரியம் நீட் தேர்வை ரத்து செய்து விடும் என்ற மனநிலைக்கு மாணவர்களை கொண்டு சென்றது.

நீட் தேர்வு முறைகேடுகள், வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வில் நிலவும் குளறுபடிகளை எதிர்த்து மாணவர்கள் மற்றும் மாணவர் அமைப்பினர் டெல்லி, சென்னை உள்ளிட்ட பல இடங்களிலும் தீவிரப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். தேர்வை ரத்து செய்யக் கோரியும், மத்திய கல்வி அமைச்சரின் பதவியை வலியுறுத்தியும் இந்தப் போராட்டங்கள் வெடித்தன.

நீட் தேர்வில் தொடர்ந்து நடக்கும் வினாத்தாள் கசிவு மற்றும் நிர்வாகத் தோல்விகளால் லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாகப் போராட்டக்காரர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

டெல்லியில் ஜந்தர் மந்தர் மற்றும் நாடாளுமன்றம் நோக்கி மாணவர்கள் நடத்திய பேரணிகள் மற்றும் போராட்டங்கள் பெரிய அளவில் கவனம் பெற்றன. மேலும் சென்னை மற்றும் பிற மாநிலங்களிலும் மாணவர் அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தன.

மாணவர் போராட்டங்களைத் தொடர்ந்து, தேர்வு முறை சீர்திருத்தங்கள் மற்றும் உயர் மட்டக் குழுக்கள் அமைக்க கோரிக்கைகள் ஏற்கப்பட்டு வருவதுடன், மாணவர்கள் மீதான சில போராட்ட வழக்குகள் ரத்து செய்யப்படுவதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

நீட் (NEET) தேர்வு பயிற்சி மையங்களில் நடைபெறும்

முறேகடுகள் மற்றும் வினாத்தாள் கசிவு புகார்கள் இந்திய அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, தேசிய தேர்வு முகமை (NTA) அதிகாரிகள் மற்றும் தனியார் பயிற்சி மையங்களின் உரிமையாளர்கள் கூட்டு சேர்ந்து இந்த முறைகேடுகளில் ஈடுபட்டதாக சிபிஐ (CBI) விசாரணையில் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.




பயிற்சி மையங்களில் கண்டறியப்பட்டுள்ள முக்கிய முறைகேடுகள் மற்றும் தற்போதைய நிலவரங்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

வினாத்தாள் தயாரிப்புக் குழுவில் இருந்த NTA நிபுணர்கள் (இயற்பியல், வேதியியல், உயிரியல் வல்லுநர்கள்) ரகசியமாக தனியார் பயிற்சி மைய உரிமையாளர்களுடன் தொடர்பு வைத்துள்ளனர். டிஜிட்டல் தடயங்கள் எதுவும் சிக்காமல் இருக்க, தேர்வு நடப்பதற்கு முன்பே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில மாணவர்களை மட்டும் தனியாக அமர வைத்து வினாக்களை எழுதச் சொல்லி மனப்பாடம் செய்ய வைத்துள்ளனர்.

வினாத்தாள்களை முன்கூட்டியே பெறவும், போலி வினாத்தாள்களை விற்கவும், ரூ. 5 லட்சம் முதல் ரூ. 30 லட்சம் வரை சில இடங்களில் தேர்வு மைய கண்காணிப்பாளர்கள் மற்றும் பயிற்சி மையங்கள் இணைந்து பணத்திற்காக மாணவர்களின் OMR தாள்களைத் திருத்திய முறைகேடுகளும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. மாணவர்களுக்குப் பதிலாக வேறு நபர்களை (Solvers) தேர்வு எழுத வைக்கும் மோசடிகளும் சில பயிற்சி மையங்களின் பின்னணியோடு நடந்துள்ளன.

தமிழகத்திலும் சில பயிற்சி மையங்கள் தரமற்ற கல்வியை வழங்கியதோடு, அதிருப்தி அடைந்து வெளியேறிய மாணவர்களின் கட்டணத்தைத் திருப்பித் தராமல் ஏமாற்றியதாக நுகர்வோர் நீதிமன்றங்களில் வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

இந்த வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடு வழக்கில் CBI (மத்திய புலனாய்வு அமைப்பு) NTA அதிகாரிகள் மற்றும் பயிற்சி மைய உரிமையாளர்கள் உள்ளிட்ட 13 பேர் மீது முதற்கட்ட குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது.

முறைகேட்டில் தொடர்புடைய நபர்களின் வங்கி கணக்குகள் மற்றும் லாக்கர்கள் உடனடியாக முடக்கப்பட்டுள்ளன.

முறைகேடுகளைத் தடுக்க வினாத்தாள் கசிவு தடுப்புத் திருத்த மசோதாவை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது. இதன் மூலம் தேர்வு மாஃபியாக்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ. 10 கோடி வரை அபராதம் விதிக்கவும், முறைகேட்டில் ஈடுபடும் பயிற்சி மையங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திமுக மற்றும் அதிமுக போன்ற கட்சிகள் நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்றும், மாணவர்களைச் சுரண்டும் தனியார் பயிற்சி மையங்களுக்கு உடனடி தடை விதிக்க வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. தேர்வு மையத்தில் செய்யப்படும் சோதனைகள் மன உளைச்சலை ஏற்படுத்தும் அதே வேளையில் நன்றாக தேர்வு செய்து எழுதி இருந்தாலும் ,சில முறைகேடுகள் குறித்து வருகின்ற செய்திகள் மேலும் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறது. மாணவர்களின் மன உளைச்சல் போக்குவது, மத்திய மாநில அரசுகள் ஆசிரியர் பெற்றோர் ஆகியோரின் கூட்டு முயற்சி மட்டுமே சரியான தீர்வாக இருக்கும்.

# மேடையில் பேசியது போதும் நல்லா படிங்கறேன்!


## பெருந்தலைவர் பேச்சை கேட்டவர் கலெக்டர் ஆனார்!


**கா**ங்கிரஸ் பொதுக்கூட்டம். திரளான மக்கள் மத்தியில் அந்த 15 வயது மாணவன் தமிழில் ஆவேசமாக பேசிக் கொண்டிருக்கிறான். மக்கள் உன்னிப்பாக அந்த மாணவனின் பேச்சை செவிமடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆண்டு 1973, மே மாதம் இருபதாம் நாள். திண்டுக்கல் தேர்தலுக்காக அலங்காநல்லூரில் அந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

மேடையின் அருகாமையில் கார் ஒன்று வந்து நிற்கிறது. அதிலிருந்து பெருந்தலைவர் காமராஜர் இறங்கி, மேடைக்கு வருகிறார். ஒரு பகுதி மக்கள் காமராஜரை வாழ்த்தி கோஷங்கள் எழுப்ப, பல பகுதி மக்கள் அந்த மாணவனின் சுவையான பேச்சில் கட்டுண்டு கிடக்கிறார்கள்.

மாணவன் பேச்சை நிறுத்துகிறான்.

காமராஜர் "பேசுங்கிறேன்"என்று சமிக்ஞை காட்டுகிறார். மாணவன் மேலும் விறுவிறுப்பாகப் பேசி முடிக்கிறான்...





கூட்டம் முடிந்ததும், மாணவனைப் பற்றி விசாரித்த காமராஜர், அவன் ஒரு காரில் அந்தப் பொதுக் கூட்டத்துக்கு வந்ததைத் தெரிந்து கொள்கிறார். "நல்லா பேசுற ஆனா.." என்று நிறுத்தி, அந்த மாணவன் முகத்தைப் பார்த்து " மாணவர்களை நான் கெடுத்துட்டேனோ"என்று கேட்கிறார். மாணவன் பதில் பேசவில்லை. "பொது நலத்தில் ரொம்ப அக்கறையா உனக்கு?" என்று கேட்டார் காமராஜர். மாணவன் தலையாட்டினான்."அப்போ ஒன்னு பண்ணு. இந்தக் கூட்டத்தை எல்லாம் தலை முழுகு. நல்லா படிங்கிறேன்.. அப்புறம் ஐஏஎஸ் எழுது.கலெக்டர் ஆவு.. மக்களுக்கு சேவை பண்ணுங்கறேன்.

என்ன நான் சொல்றது சரிதானாங்றேன்" என்று காமராஜர் அன்று கேட்டதை மனதில் வாங்கிய மாணவன், பின்னர் அவர் சொன்னபடியே படித்து கலெக்டர் ஆனான்...

தமிழ் வழியில் படித்தவர்..முதன் முதலில் ஐ.ஏ.எஸ். தேர்வைத் தமிழில் எழுதித் தேர்வு பெற்றவர்.. தமிழ் படிக்கும் ஒருவன் எந்த நிலையிலும் கெட்டுப் போக மாட்டான் என நிரூபித்த ஆட்சியர் ஆர்.பாலகிருஷ்ணன்தான் அவர்!

ஆர்.பாலகிருஷ்ணன்,1984இல் ஐ.ஏ.எஸ். தேர்வு மற்றும் அதற்கான நேர்காணலை முழுக்கத் தமிழிலேயே அளித்து முதல் அமர்விலேயே வெற்றியை சாதித்தவர்.

ஒடிசா மாநிலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். சிந்துவெளி ஆய்வாளராக இருந்து உலகத் தமிழ் மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தார். நிறைய நூல்களை நமக்குத் தந்திருக்கிறார்!



தலைநகர் டெல்லியில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் துணைத் தேர்தல் ஆணையராகப் பணி ஆற்றி, இரண்டு பாராளுமன்ற தேர்தல், 30 மாநில சட்டமன்றத் தேர்தல்களை, அதிலும் சவாலான நக்சல்பாரிகள் நிறைந்த சில பகுதிகளிலும் வெற்றிகரமாக நடத்தி முடித்தவர், இன்று ஒடிசா மாநிலத்தின் தலைமை ஆலோசகராக இருக்கிறார்.

ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெறுவதற்கு முன்பு தினமணி நாளிதழில் துணை ஆசிரியராகப் பணி புரிந்திருக்கிறார். தமிழ் வழியில் படித்து எப்படி ஐ.ஏ.எஸ் ஆனார்? அவரையே கேட்போமா?....

"பள்ளிப் படிப்பு முடித்ததும் என்ன செய்யவேண்டும் என்று வழிகாட்டும் அளவுக்கு எனக்குக் குடும்பப் பின்னணி கிடையாது. யாருக்கும் அந்த சந்தர்ப்பத்தில் பொதுவாக மருத்துவம் அல்லது பொறியியல் போன்ற படிப்பைத் தான் நாடத் தோன்றும்.

"நாம் எதில் முதல்வனாக விளங்க முடியும் என்ற கேள்வியை எனக்குள் கேட்டுக் கொண்ட போது தமிழ் இலக்கியத்தில் அது முடியும் என்று உறுதியாகத் தோன்றியது. அந்தத் தெம்பு வேறு படிப்பில் கிட்டுமா என்பது சந்தேகமாகத்தான் இருந்தது. இதைப் படித்தால் வேலை கிட்டும் இதைப் படித்தால் கிட்டாது என்று தான் எல்லாப் பெற்றோர்களும் அளவு கோல்களை வைத்திருக்கிறார்கள். நாம் எதில் தலை சிறந்து விளங்குவோமோ அதைச் செய்வதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றியது.

தியாகராயர் கல்லூரியில் பி.ஏ. தமிழ் இலக்கியம் படிக்கச் சேர்ந்தபோது யாரையும் கேட்காமல் நானே முடிவெடுத்துப் போய் சேர்ந்து கொண்டேன்.

"நான் அப்படி சேர்ந்ததும் என் வீட்டில் என்னிடம் பேசக்கூட மறுத்து விட்டார்கள் என்று சொல்லலாம். நான் ஏதோ தற்கொலைக்கு சமமான ஒரு முடிவு எடுத்து விட்டதைப் போல அவர்கள் நடந்து கொண்டார்கள். சுற்றம் நட்பு எல்லாம் கேட்டது, "தமிழ் படித்து நீ என்ன செய்யப் போகிறாய்" என்று.

"கல்லூரி வாழ்க்கையில் படிப்பைத் தவிர பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டிகளில் பங்கேற்பும் அது மட்டுமின்றி சில பொது வாழ்க்கைத் தொடர்புகளும் இருந்தன. சில கருத்து வேறுபாடுகளால் நான் முதலாண்டு படித்துக் கொண்டிருந்த கல்லூரியை விட்டு விலகி 2 மற்றும் 3ஆம் ஆண்டுகள் வேறு ஒரு கல்லூரியில் சேர்ந்து படிப்பைத் தொடர நேர்ந்தது.


"மறைந்த பேராசிரியர் தமிழ்க்குடிமகன் அவர்களை நான் கலந்து கொண்ட பேச்சுப்போட்டிகளின் போது நடுவராக, சிறப்பு விருந்தினராக சந்திக்கும் வாய்ப்பு பல சந்தர்ப்பங்களில் எனக்குக் கிட்டியது. யாதவா கல்லூரியில் எனக்கு அவர் இடமளித்தது மட்டுமல்லாது பல வகைகளிலும் எனக்குத் தன்னம்பிக்கை ஊட்டினார். "எனது பள்ளி, கல்லூரி வாழ்க்கையில் இவரைப் போன்ற தமிழறிஞர்கள் அளித்த உற்சாகமும் பேராதரவும் எனக்குப் பேச்சு, கவிதைப் போட்டிகளில் 94 பரிசுகளை பெற்றுத் தந்தது.

"நான் படித்துக் கொண்டிருந்த கல்லூரியில்

குன்றக்குடி அடிகளார் கேடயம் என்று ஒரு சுழற்கேடயம். மதுரையில் உள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும் பேச்சுப்போட்டி நடத்துவார்கள். முதலாண்டு நான் படித்த கல்லூரிக்கு நான் வெற்றி பெற்றதனால் அந்தச் சுழற்கோப்பை கிடைத்தது.

"நான் எம்ஏ படித்துக்கொண்டிருந்தபோது இதழியல் எனக்கு சிறப்புப் பாடம். அப்போது நாங்கள் கண்டிப்பாக சில நாளிதழ்களில் சிறிது நாட்கள் பணியாற்ற வேண்டும்.

நானும் என் நண்பர்களும் அப்படி ஒரு பயிற்சிக்காக மதுரை தினமணி இதழ் அலுவலகத்துக்குப் போயிருந்தோம். தினமும் போய் அவர்கள் அங்கு எப்படி எடிட் செய்கிறார்கள் டெஸ்க் வேலை எப்படி செய்கிறார்கள் என்று பார்ப்போம்.




நாங்கள் 15 நாட்கள் பயிற்சியை முடித்து விடை பெற்றுக் கிளம்புகையில், என்னை மட்டும் தனியாகக் கூப்பிட்டார் சிவராமன். "பரீட்சை எப்போது முடியும்?" என்று கேட்டார். "இன்னும் 3 மாதங்களில் முடியும்" என்றேன். "அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?" "வேலைக்குச் சேருவேன்" என்று சொன்னேன். "இங்கே வேலை கொடுத்தால் சேருவாயா?" சிவராமன் அவர்கள் கேட்டபோது யோசித்துச் சொல்கிறேன் என்று கூட சொல்லத் தோன்றவில்லை.உடனே "தாராளமாக" என்று பதிலளித்தேன்.

"தினமணியில் வேலை பார்த்தபோது உடன் வேலை பார்த்த நண்பர்கள் என்னிடம் ஐ.ஏ.எஸ் தேர்வு எழுதினால் என்ன என்று கேட்கத் துவங்கினார்கள். அப்போது 1973ல் பெருந்தலைவர் சொன்ன விஷயத்தை நான் திரும்ப அசைபோடத் துவங்கினேன். எனது நெருங்கிய நண்பர்கள் அடிக்கடி ஐ.ஏ.எஸ் பற்றிப் பேசியதால் நானே அது குறித்து தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தேன். அதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு படித்தேன் என்று சொல்ல முடியாது.

"இடையில் நாடகத்தின் மீது ஆர்வம் வந்தது. நானே ஒரு குழுவை அமைத்துக் கொண்டு, நாடகங்களில் நடிக்கத் துவங்கினேன்.கவிதைகள் எழுதினேன். பாடல்கள் பாடினேன். திரைப்படங்களில் ஆர்வம் காட்டினேன்.

"இதில் திரைப்படமா, ஐ.ஏ.எஸ் தேர்வா என்ற கேள்வி எழுந்தபோது பரீட்சை எழுதிப் பார்ப்போம்.. தேறினால் ஐ.ஏ.எஸ். இல்லையென்றால் பத்திரிகை அல்லது திரைப்படத்துறைக்குப் போவது என்று முடிவெடுத்தேன். இந்த முடிவில்தான் நான் விண்ணப்பத்தாளை வாங்கினேன்.

"நான் ஒரே ஒரு முறைதான் தேர்வு எழுதினேன். பொதுவாக ஐ.ஏ.எஸ் எழுதுபவர்கள் பலமுறை தோல்வியுற்று, உடனடியாக அடுத்தடுத்து தேர்வுகள் எழுதுவார்கள். ஒருவேளை அப்போது தேர்ச்சி பெற்றிருக்காவிட்டால் நான் மீண்டும் தேர்வு எழுதியிருக்க மாட்டேன் என்றுதான் தோன்றுகிறது.

"இந்திய ஆட்சிப் பணித்துறை வரலாற்றில் தமிழை ஒரு தாளாக எழுதி நிறைய பேர் தேர்வு அடைந்து இருக்கிறார்கள். அவர்கள் பல துறைகளில் மாணவர்களாக இருந்திருக்கலாம்.

"ஆனால் இளங்கலை மற்றும் முதுகலையை தமிழில் பயின்று ஒரே முயற்சியில் நேரடித் தேர்வில் இதுவரை யாரும் வந்தது இல்லை. முதல் மாணவனாக வந்தது பற்றி தமிழக சட்டசபை தொடங்கி பல இடங்களிலும் பேசினார்கள். பல இதழ்களிலும் ஊடகங்களிலும் இது பேசப்பட்டது. "அந்த வகையில் தமிழ் மாணவர்களுக்கு தமிழ் படிக்கும் ஒருவன் கெட்டுப் போக மாட்டான் என்ற ஒரு உறுதியைக் கொடுக்க முடிந்ததில், எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி என்றுதான் சொல்லவேண்டும்!"

**தகவல்: பாண்டியன் சுந்தரம், மன்னார்குடி**



# வேண்டாத மரத்தை வெட்டாதீர்கள் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்புங்கள்!

**வ**ளர்ந்த மரத்தைப் பிரிய மனமில்லையா? மரத்தை எடுத்துச் செல்ல மரங்களுக்கும் இப்போ ஆம்புலன்ஸ் சர்வீஸ் வந்தாச்சு!

உலகின் பசுமைமயமாக்கலில் அதிகப் பங்கு இந்தியா மற்றும் சீனாவில் நடந்து கொண்டிருக்கிறது என சமீபத்தில் நாசா தனது செயற்கைக்கோள் படங்களோடு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.புவி வெப்பமயமாதல் கண்டு பயப்படத் தொடங்கி உள்ள இவ்விரு நாடுகளும் நெகிழி ஒழிப்பு, இயற்கை உணவு,மரம் நடுதல் என பூமியை,மண்ணைக் காக்க முயற்சிகள் எடுத்து வருகின்றன.

இதற்கு உதவவே 'ட்ரீ ஆம்புலன்ஸ்' எனும் புதுமையான திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் மனித ஆபத்துக்களால் பாதிக்கப்பட்ட மரங்களை மீட்டு நகரை பசுமை மாறாமல் காப்பதே.

ஏனெனில், கடந்த ஆண்டுகளில் மரங்களின் எதிர்காலத்தைச் சிதைக்கும் விதத்தில் வார்தா மற்றும் கஜா புயல்சீற்றங்களின் போது இயற்கையின் கோரக் கரங்களால் எண்ணற்ற மரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டன. இதனால் தமிழகத்தின் பெரும்பகுதி தனது பசுமையை இழந்தது. புயலால் பாதிப்புக்கு உள்ளான மரங்களை மீட்க நம்மிடம் அப்போது எந்த விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளோ அல்லது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளோ இல்லாதிருந்த காரணத்தால் வார்தா புயலின் போது சென்னை நகரம் தனது ஒட்டுமொத்த மரங்களை இழந்து தவித்தது.

மீண்டும் அப்படியொரு அபாயகரமான சூழலுக்கு தமிழகம் இடமளித்து விடக்கூடாது. எனவே, வேரோடு சாய்ந்த மரங்களையும் கூட ட்ரீ ஆம்புலன்ஸ் மூலமாக மீட்டு முதலுதவி அளித்து வேறொரு இடத்தில் நிர்மாணித்தால் மரங்கள் பெருமளவில் உயிரிழக்கும் அபாயத்தை தடுக்கலாம் என்பதே இத்திட்டத்தை முன்மொழிந்துள்ள SASA அமைப்பின் நோக்கம்.

சென்னை சாலைகளில் தற்போது 33 மனிதர்களுக்கு ஒரு மரம் என்கிற விகிதாச்சாரத்தில் மரங்களின் எண்ணிக்கைக் குறுகி விட்டது. நிலமை இப்படியே சென்றால் பிறகு 100 மனிதர்களுக்கு ஒரு மரம், 1000 மனிதர்களுக்கு ஒரு மரம் எனும் விகிதத்தில் மரங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போய் இறுதியில் மரங்களற்ற பாலைவனமாகச் சென்னை மாறவும் வாய்ப்பிருக்கிறது.

அந்தநிலை வராமல் தடுக்கத்தான் இந்தியாவின் பசுமை மனிதர் டாக்டர் அப்துல் கனி இப்படி ஒரு அருமையான திட்டத்தை SASA அமைப்பின் துணையுடன் முன்மொழிந்திருக்கிறார். இது அவரது மூளையில் உதித்த திட்டம் தான். அவரது வழிகாட்டுதலின் படி இந்த 'ட்ரீ ஆம்புலன்ஸில்' தாவரவியல் நிபுணர்

# TREE AMBULANCE

ஒருவர் தோட்டப்பணிகளில் தேர்ந்த உதவியாளருடன் பயணிப்பார். அவர்களுடன் தோட்டப் பணிகளுக்குத் தேவையான உபகரணங்கள், தண்ணீர், உயிர் உரம் மற்றும் தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகளும் அதே ஆம்புலன்ஸில் இடம்பெறும் என SASA அமைப்பின் நிர்வாகி சுரேஷ் கிருஷ்ண ஜாதவ் தெரிவித்தார்.

மரங்களுக்கான முதலுதவிப் பெட்டி, விதை வங்கி, விதைப்பந்து, வேரோடு விழுந்த மரங்களை மீண்டும் வேறிடத்தில் நட்டு வளர்த்து நிர்மாணிக்கத் தேவையான உபகரணங்கள், நகரின் பல்வேறு இடங்களிலும் மரம் நடுவதற்குத் தேவையான மரக்கன்றுகள், மண்வளம் குன்றிய பகுதிகளில் வளர இயலாமல் தன் வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணற்ற மரங்களை மீட்டு வேறிடங்களில் நடத் தேவையான வசதிகள், நடப்பட்ட மரங்கள், நீக்கப்பட்ட மரங்கள் போன்றவை குறித்த ஒரு துல்லியமான சர்வே என ட்ரீ ஆம்புலன்ஸ் திட்டத்தின் கவனக் குவிப்பு பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

நாட்டில் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் உயிர்காக்க ஆம்புலன்ஸ் சேவை இருக்கும் போது ஒட்டுமொத்த மனித உயிர்களும் செழிப்புடனும், ஆரோக்யத்துடனும் வாழத் தேவையான பல விஷயங்களைத் தரும் கொடை வள்ளல்களான மரங்களை உயிருடன் மீட்பதற்கு மட்டும் ஆம்புலன்ஸ் சேவை ஏன் இருக்கக்கூடாது? மரங்களுக்கும் தேவை ஆம்புலன்ஸ்கள் எனும் தார்மீக கோபத்தில் உருவானது தான் ட்ரீ ஆம்புலன்ஸ் சேவைத் திட்டம்.

கடந்த 2016 ஆம் ஆண்டு இயற்கைச் சீற்றத்தால் சென்னை இழந்த மரங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் மேலானது. இழந்த மரங்களில் ஒன்றைக்கூட இன்றும் நம்மால் வளர்த்தெடுக்க முடியவில்லை. அவ்விதமான இக்கட்டான நேரங்களில் இந்த ஆம்புலன்ஸ் நிச்சயம் உதவிகரமானதாக இருக்கும். மரங்களைக் காக்க நினைப்பவர்கள் எங்களது ட்ரீ ஆம்புலன்ஸ் ஹெல்ப் லைன் நம்பருக்கு அழைத்துத் தகவல் அளித்தால் போதும், எங்களது அமைப்பினர் நேரில் வந்து இலவசமாக மரங்களை மீட்டுத் தேவையான உதவிகளைச் செய்து முடிப்பார்கள். என்கிறார் பசுமை மனிதர் அப்துல் கனி.

இந்தத் திட்டத்தை நாங்கள் முதலாவதாகத் துவக்கி விட்டோமே தவிர, இதற்கு நாங்கள் மட்டுமே சொந்தம் கொண்டாட முடியாது. இது போன்ற நல்ல திட்டங்களுக்கு மக்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் துணையும் தேவை. சமூக சேவை அமைப்புகள் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை மக்களிடையே விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் வாயிலாகக் கொண்டு சேர்க்க வேண்டும். தற்போது சென்னையில் மட்டுமே தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் கூடிய விரைவில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் பரவ வேண்டும் அதற்கு தன்னார்வத் தொண்டர்களின் வலிமை வாய்ந்த உதவி தேவை எனும் சுரேஷ் கிருஷ்ண ஜாதவ், ட்ரீ ஆம்புலன்ஸின் ஹெல்ப் லைன் எண்ணையும் வெளியிட்டார்.

**ட்ரீ ஆம்புலன்ஸ் ஹெல்ப் லைன் எண்: 9941006786**



# அவமானங்களை தாங்கி நாப்கின் தயாரிப்பில் உலகப் புகழ் பெற்ற கோவை முருகானந்தம்!

**– அம்ரா பாண்டியன்**



**பை**த்தியக்காரன், பெண் பித்தன் என அழைக்கப்பட்டார்; சூனியம் வைத்து விட்டதாக அம்மா சொன்னார்;மனைவி, அம்மா பிரிந்து சென்றனர்;ஊரை விட்டு துரத்தப்பட்டார்.. மனம் தளராமல் கண்டு பிடித்தார் மலிவுவிலை நாப்கின்களை!

பெண்களுக்கான குறைந்த விலை சானிடரி நாப்கின் அடிமட்ட ஏழைப் பெண்களுக்கும் போய்ச்சேரும் அற்புதத்தை நிகழ்த்தியவர் கோவை முருகானந்தம்!

படித்ததோ 8ஆம் வகுப்பு; ஆனால் இவர் பற்றிய பாடத்தை 12ஆம் வகுப்பு மாணவர்கள் இன்று படித்து வருகின்றனர்!

டைம்ஸ் இதழில் உலகின் தலைசிறந்த 100 மனிதர்களின் பட்டியலில் இடம் பிடித்தவர் இவர். 4 கோடி ரூபாயில் தயாரிக்கப்படும் நாப்கின் எந்திரத்தை வெறும் 45 ஆயிரம் ரூபாயில் தயாரித்து, முதல் எந்திரத்தை பீகார் மலைவாழ் மக்கள் வசிக்கும் மதுபனி கிராமத்திற்கு எடுத்துச் சென்றார்.

இரண்டாவது எந்திரத்தைத் தயாரித்து உத்தரகாண்ட் ருத்ரப்ரியா கிராமத்திற்கு எடுத்துச் சென்றார். அம்மக்களின் பயன்பாட்டில் இது தன் வெற்றிகரமான கண்டுபிடிப்பாக இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறார்.

அப்புறம் என்ன? ஏராளமான விருதுகள் இவரைத் தேடி வருகின்றன. நமது இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கிறது. இவர் வாழ்க்கை 'பேட்மேன்' என இந்தியில் திரைப்படமாக எடுக்கப்பட்டது. நடிகர் அட்சயகுமார் நடிக்க, இயக்கி, வெற்றிவாகை சூடுகிறார் இயக்குனர் ஆர்.பால்கி.



2018இல் அமெரிக்க வாழ் ஈரான் பெண் ராக்யா செப்தாக்சி எடுத்த 'பீரியட் என்ட் ஆஃப் சென்டன்ஸ்' என்ற இவர் பற்றிய ஆவணப்படம் ஆஸ்கார் விருதைப் பெற்றது. இவ்வளவுக்கும் காரணமான முருகானந்தம்சந்தித்த அவமானங்கள் வேறு மனிதர்கள் சந்தித்து இருப்பார்களா என்பது சந்தேகமே.

ஆனால், அதற்கு இவர் கொடுத்த விலை.. அப்பப்பா! யாராலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவு மிகக் கொடுமையானது. அவருடைய வார்த்தைகளிலேயே அதைக் கேட்போம்...

"என் ஊர் பாப்பநாயக்கன்புதூர். அப்பா நெசவுத் தொழிலாளி. அம்மா விவசாயக் கூலி. எனக்கு ரெண்டு தங்கச்சிங்க. திடீர்னு ஒருநாள் அப்பா இறந்துட்டார். குடும்பமே இடிஞ்சு போயிடுச்சு. வீட்டின்

வறுமையைப் போக்க கிரில் பட்டறை வேலைக்குப் போனேன். அங்க புதுசு, புதுசா நிறைய முயற்சி பண்ணினேன். அம்மா வாசல்ல போடுற கோலத்தை வீட்டு ஜன்னல் ஆக்கினேன். இதனால, என் முதலாளிக்கு என்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு.

ஆனா, எனக்கு ஒரு தொழில்லயே ரொம்ப நாள் ஒட்டாது. நான் கிளம்புறேன்னு சொன்னப்ப முதலாளி, 'நீயே இந்தக் கடையை வாங்கிக்கோ'னு சொல்லி பணத்துக்கு வழிகாட்டினார். கடையை எடுத்து நல்லாவே நடத்தினேன். எனக்குக் கல்யாணமும் ஆச்சு. ஒருநாள் என் மனைவி எதையோ மறைச்சி எடுத்துட்டுப் போனாங்க. என்னனு கேட்டப்ப, 'இது பொம்பளைங்க சமாச்சாரம்'னு சொல்லிட்டு விறுவிறுனு ஓடப் பார்த்தாங்க.

நான் அவங்ககிட்ட இருந்து அதைப் பிடுங்கிப் பார்த்தா அழுக்கான துணி. 'ஏன் ஒரு நாப்கின் வாங்கக்

கூடாதா?'னு மனைவியைத் திட்டினேன். அவங்களோ, 'அதுக்கு எல்லாம் செலவு பண்ணா குழந்தைக்குப் பால் வாங்க எங்க போவேன்'னு கேட்டாங்க. அதோட மட்டும் இல்லாம பெரும்பாலான கிராமப் பெண்கள் வசதி இல்லாததால இதுமாதிரி அழுக்குத் துணிகளைத்தான் பயன்படுத்துறாங்கனு அவங்க சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போயிட்டேன்.

அப்பதான் நாப்கினை நாமே தயாரிக்கலாமேனு எண்ணம் எழுந்துச்சு. கடையில ஒரு நாப்கினை வாங்கி, அதைப் பிரிச்சுப் பார்த்தேன். அதுல பஞ்சு மாதிரி ஒரு பொருள் இருந்துச்சு. உடனே பஞ்சை நல்லா அடைச்சு நாப்கின் தயாரிச்சேன்.

இதை யார்கிட்டே போய் சோதனை பண்ண முடியும்.என் மனைவிகிட்ட போய் தயக்கமா நின்னேன். இப்படியே என்னோட சோதனைகள் தொடர்ந்தது. ஆனா, ஏகப்பட்ட ஏமாற்றம். ஒருகட்டத்துல என் மனைவிக்கு என் மேல ரொம்பக் கோபம்வந்து இந்த விஷயத்தை நிறுத்துங்கனு சொல்லி கண்டபடி திட்டிட்டாங்க.பிரிஞ்சும் போயிட்டாங்க.

வேற வழி இல்லாம நான் பக்கத்துல இருந்த மருத்துவக் கல்லூரி பெண்களிடம் என் ஆராய்ச்சியைச் சொல்லி உதவி கேட்டேன். பல பெண்கள் என்னைப் பைத்தியக்காரன் என்று திட்டினாங்க.வேறு சிலர் கல்லூரி வாசலில் நிற்பதை, கல்லூரி மாணவிகளைச் சுற்றி வந்ததைப் பார்த்து விட்டு பெண் பித்தன் என்றார்கள்.

கடைசியில் சிலர் ஒத்துழைப்புக் கொடுக்க முன்வந்தாங்க. சில வாரங்களில் அவங்களாலும் தொடர்ந்து ஒத்துழைக்க முடியலை. வேற வழி இல்லாம என்னையே சோதனைக்கு உள்ளாக்க முடிவு பண்ணினேன்.

என் நண்பரின் கறிக் கடையில் இருந்து ஆண்டின் சூடான ரத்தத்தை வாங்கிட்டு வந்து இடுப்பில் ஃபுட்பால் பிளாடரில் நிரப்பிக்கிட்டேன். நடுவில சின்னக் குழாய் மூலமா நாப்கினை நோக்கி இணைச்சுக்கிட்டேன். பிளாடரை அழுத்தினா ரத்தம் நாப்கினில் விழும். இந்த நாப்கினுக்காகப் பலவிதமான பஞ்சுகளை வெச்சுப் பரிசோதிச்சேன்.

இந்தச் சோதனையில் என் வேட்டி எல்லாம் ரத்தம் கொட்டியது. ஒரு மணி நேரத்தில் தாங்க முடியாத நாற்றம் வந்தது. இதைப் பார்த்து எனக்கு ஏதோ பால்வினை நோய் இருக்குனு ஊர்ல தகவல் பரவிடுச்சு. என் மனைவி கோவிச்சுக்கிட்டு என்னைவிட்டு நிரந்தரமாப் பிரிஞ்சுப்போயிட்டாங்க!

சோதனைக்காக என் பட்டறையில் இருந்த கடைசி ஸ்கிராப் வரைக்கும் வித்துட்டேன். ஆனாலும், எனக்கு நம்பிக்கை மட்டும் போகலை. சில பெண்கள் உபயோகப்படுத்தின நாப்கின்களைச் சேகரிச்சு, அதை



வீட்டுல காயவெச்சு சோதனை செஞ்சேன். என் அம்மா இதைப் பார்த்து எனக்கு யாரோ சூனியம் வெச்சுட்டாங்கனு தனியா பிரிஞ்சு போயிட்டாங்க. ஊர்க்காரங்க எல்லாம் சேர்ந்து என்னை ஊரைவிட்டு விலக்கிவெச்சுட்டாங்க.

கண்ணீரோட நான் என் கிராமத்தை விட்டு கிளம்பினப்ப, என் கூடவந்த ஒரே ஜீவன் நான் வளர்த்த நாய் மட்டும்தான். அதோட கோவைக்கு கிளம்பி வந்து விட்டேன். அறை பிடிச்சுத் தங்கி வெறும் பிரெட் மட்டும் சாப்பிட்டு ஓயாம உழைச்சேன். அப்புறம்தான் வெளிநாட்டு கம்பெனிக்காரன் பயன்படுத்தறது ஃபைன் மரப் பஞ்சுனு தெரிஞ்சுது. அதைக்கொண்டு நாப்கின் தயாரிக்கிற இயந்திரம் எட்டுக் கோடி ரூபாய் ஆகும்னு சொன்னாங்க.

நான் ஃபைன் மரப் பஞ்சை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி பண்ணினேன். சுமார் ஆறு மாசம் ரெண்டு மணி நேரம் மட்டுமே தூங்கி, கஷ்டப்பட்டு ஒரு இயந்திரத்தைத் தயாரிச்சுட்டேன். இதுக்கு 45 ஆயிரம் செலவாச்சு. இயந்திரத்தைத் தயாரிச்சு முடிச்சப்ப என் கையில் ஒரு பைசா இல்லை.

சேமிப்பு, இருந்த சொச்ச சொத்து எல்லாத்தையும் இழந்துட்டேன். ஆனா, அதுல தயாரிச்ச ஒரு நாப்கினை ஒரு கல்லூரி பொண்ணு பயன்படுத்திட்டு, 'அண்ணா, இதை யூஸ் பண்ற மாதிரியே எனக்குத் தெரியலை. ரொம்ப வசதியா இருக்கு'னு சொன்னப்போ கதறி அழுதுட்டேன்.

அது என் பல ஆண்டுக் கனவு. அதுக்காக நான் என் வாழ்க்கையையே இழந்திருக்கேன். தகவல் பரவி நிறையப் பேர் இந்த இயந்திரத்தைத் தயாரிக்கச் சொல்லி ஆர்டர் கொடுத்தாங்க. நான் தயாரிச்ச இயந்திரம் மூலமாப் பெண்களே இப்ப சுலபமா நாப்கினைத் தயாரிக்க முடியும்.

ஒரு நாப்கின் விலை ஒரு ரூபாய்தான்! அவமானங்களை அனுபவித்திருந்தாலும் நம்மாலும் மனித குலத்திற்கு நல்லது செய்ய முடிந்ததே என இன்று பெருமிதம் அடைகிறேன்!" என்று மகிழ்ச்சியோடு கூறுகிறார் முருகானந்தம்.

# நானும் ஒரு நாள் அப்துல்கலாம் ஆக வருவேன்!

## நம்பிக்கையோடு சொல்கிறார் பலரை மாற்றும் திறன் பெற்ற மாற்றுத்திறனாளி ஸ்ரீகாந்த்!



**பா**ர்வை கண்களில் இல்லை; நம்பிக்கை இருந்தது மனதில்.."இந்தியாவின் முதல் பார்வையற்ற குடியரசுத்தலைவர் ஆவது லட்சியம்" என்று அப்துல்கலாமிடமே கூறிய ஸ்ரீகாந்த் உயர்ந்த கதை!

'இந்த உலகில் உன்னால் எதுவுமே முடியாது' என்று பலர் சொன்னபோது 'என்னால் எதுவும் முடியும்' என்றார் பார்வையற்ற இளைஞர் ஸ்ரீகாந்த்.

2006ஆம் ஆண்டு டாக்டர் அப்துல் கலாம் இந்தியக்குடியரசுத்தலைவராக இருந்தபோது ஆந்திராவில் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் வழங்கச்சென்றிருந்தார். அப்போது மாணவர்கள் சிலரை சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டது அவருக்கு.

மாணவர்களிடம் கலாம் கேட்டார்:"நீங்கள் எல்லாம் என்னவாக விரும்புகிறீர்கள்?'' ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடை சொல்ல, பார்வையற்ற ஒன்பதாம் வகுப்பு மாணவரான ஸ்ரீகாந்த் எழுந்து பட்டென்று சொன்னார்... "உங்களைப்போல் நாட்டின் குடியரசுத் தலைவராக விரும்புகிறேன்.

என் விருப்பம் நிறைவேறினால் நான் தான் இந்தியாவின் முதல் பார்வையற்ற குடியரசுத் தலைவராக வரலாற்றில் பதிவு செய்யப்படுவேன்"

சுற்றியிருந்தவர்கள் திடுக்கிட, கலாம் புன்னகைத்தார். அந்த மாணவனின் வித்தியாசமான விருப்பத்தையும், நோக்கத்தையும் புரிந்துகொண்டார்.

''ஸ்ரீகாந்தைப் போல மிகப்பெரிய இலக்குகளை அடைய ஆசைப்படுங்கள், சிறிய இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ளுவதுதான் குற்றம்" என்றார்.

"உங்களுடைய கனவு ஒருநாள் நனவாக ஆசைப்படுகிறேன். இதற்காக நீங்கள் மிகக் கடுமையாக உழைக்க வேண்டும்" என்று ஸ்ரீகாந்திடம் கேட்டுக்கொண்டார்.

யார் இந்த ஸ்ரீகாந்த்? அவரைப் பற்றி நீங்கள் கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும்...

பிறவியிலேயே பார்வையற்றுப் பிறந்த ஸ்ரீகாந்த் ஆந்திர மசூலிப்பட்டணத்தைச் சேர்ந்த ஒரு ஏழை விவசாயக் கூலித் தொழிலாளியின் மகனாகப் பிறந்தவர். அந்தக் காலகட்டத்தில் அந்தக் கிராமமே அவரது குடும்பத்தினருக்குக் கூறிய யோசனை என்ன தெரியுமா? "இந்தக் குழந்தையைக் கொன்றுவிடுங்கள்.."

கண்கள் இல்லாமல் இக்குழந்தை பயனற்றது என்றும் கூறினார்கள். பார்வையில்லாதவராகப் பிறந்ததைவிட வறுமையான சூழ்நிலையில் பிறந்தது தான் ஸ்ரீகாந்திற்கு பெரும் சவாலாக இருந்தது. பார்வையற்ற மகனைப் பள்ளிக்கு

அனுப்பினால் எப்படி படிக்க முடியும் என்று எண்ணிய அப்பா தன்னுடன் விவசாயத்திற்குக் கூட்டிச் சென்றார்.

ஆனால், ஸ்ரீகாந்திற்குப் படிப்பதில்தான் பிரியம். வீட்டிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பள்ளிக்குச் செருப்புக் கூட அணியாத கால்களுடன் நண்பர்கள் உதவியுடன் நடந்தே போய் படித்து வந்தார்.

பள்ளியில் இவரைக் கடைசி பெஞ்சில் உட்கார வைத்தும், அவமதித்தும், சந்தேகம் கேட்டால் கேலி செய்தும் அவமானப்படுத்தினார்கள். 'உன்னால் என்ன செய்ய முடியும்?'என்ற கேள்வி கேட்டவர்களிடம், 'என்னால் என்ன செய்ய முடியாது?' என்பதைப் பதிலாக தந்துவிட்டு பள்ளியை விட்டு நின்றார்.

பிறகு பார்வையற்றோர் பள்ளியில் சேர்ந்து படித்தார். பார்வையற்றோர் பள்ளியில் படிக்கும்போதுதான் டாக்டர் அப்துல் கலாமை சந்திக்கும் வாய்ப்பு ஸ்ரீகாந்த்துக்குக் கிடைத்தது.

மிகக் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற கலாமின் அறிவுரை ஸ்ரீகாந்த்துக்கு ஒவ்வொரு நொடியும் நினைவில் இருந்து கொண்டே இருந்தது. பார்வை இல்லாத ஸ்ரீகாந்த்துக்கு சுவாமி விவேகானந்தரும் அப்துல் கலாமும் இரண்டு கண்கள்.

பார்வையற்றவர்களுக்கு எதெல்லாம் சவாலோ, அந்தச் சவால்களைத் தனது செவிகளைக் கொண்டு வென்றார். கிரிக்கெட் விளையாடினார், செஸ் விளையாடினார். தேசிய செஸ் வீரராகத் தன்னை உயரஅந்தச் சவால்களைத் தனது செவிகளைக் கொண்டு வென்றார். கிரிக்கெட் விளையாடினார், செஸ் விளையாடினார். தேசிய செஸ் வீரராகத் தன்னை உயர்த்திக்கொண்டார். மாநில அளவிலான பார்வையற்றோர் பிரிவு கிரிக்கெட் வீரராகவும் களமிறங்கினார்.

அதுமட்டுமல்ல, பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்றார். உயர்கல்வியில் இவருக்கு ராயல் சீனியர் கல்லூரியில் இவர் கேட்ட அறிவியல் பிரிவு தரப்படாது, கலைப்பிரிவு தான் ஒதுக்கப்பட்டது. பார்வையற்றவரால் அறிவியல் பிரிவு படிக்க முடியாது என்று காரணம் சொன்னார்கள்.

"அது முடியுமா? முடியாதா? என்பதை நான் முடிவு செய்துகொள்கிறேன். நீங்கள் எனக்கு அறிவியல் பிரிவுதான் கொடுக்க வேண்டும்" என்று நீதிமன்றம் சென்றார். வெற்றி பெற்று, அறிவியல் பிரிவைப் படித்தார்.

முழுப் பாடங்களையும் ஆடியோ



டேப்பில் பதிவு செய்து, தொடர்ச்சியாகக் கேட்டுக் கேட்டே உள்வாங்கி மனதில் இருத்திக் கொண்டார். முடிவில் 90% மதிப்பெண் எடுத்து கல்லூரி நிர்வாகமே பாராட்டும் சாதனை மாணவரானார்.

அடுத்து இந்தியாவிலுள்ள ஐ.ஐ.டியில் படிக்க விண்ணப்பித்தார். இவரது பார்வைக் குறைபாட்டைக் காரணமாகச் சொல்லி ஐ.ஐ.டி இவரை நிராகரித்தது.

மனம் தளரவில்லை..அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ள புகழ்பெற்ற எம்.ஐ.டி

கல்வி நிறுவனத்திற்குப் பொறியியல் படிக்க விண்ணப்பித்தார்.

ஸ்ரீகாந்தின் விண்ணப்பத்தைக் கண்ட அமெரிக்க எம்.ஐ.டி நிர்வாகம் அவரை வாரி அணைத்துக்கொண்டது. உங்களுக்குக் கட்டணமெல்லாம் கிடையாது. முழுக்க முழுக்க இலவசமாக படிக்கலாம் என்று உலகளவில் புகழ்மிக்க அந்தத் தொழிற்கல்வி நிறுவனம் அறிவித்தது.

லீடு2020(Lead2020)என்ற இயக்கம் மற்றும் நிணி எனப்படும் அமெரிக்காவில் உள்ள ஜெனரல் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த எண்ணற்ற தன்னார்வலர்கள் உதவியுடன் அமெரிக்கா சென்றார் ஸ்ரீகாந்த். படித்து சிறப்பாகத் தேறினார்.

“எங்களிடம் பணிக்கு வாருங்கள் பல லட்சங்களை சம்பளமாகத் தருகிறோம்” என்று இவருக்கு உடனடியாக அழைப்பு விடுத்தது அமெரிக்க ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம்.

"உங்கள் உதவிக்கு நன்றி. எனக்கு லட்சங்கள் முக்கியமில்லை. லட்சியமே முக்கியம். ஒருவேளை நான் இந்தியப் பார்வையற்ற முதல் குடியரசுத்தலைவர் ஆகா விட்டால் உங்கள் அழைப்பினை ஏற்றுக் கொள்கிறேன்." என்று சொல்லி விட்டு இந்தியா திரும்பினார்.

வந்தும் அவர் சும்மா இருக்கவில்லை... மறுசுழற்சி முறையில் பயன்படுத்தக் கூடிய பேக்கேஜிங் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்தை ஒரு தகரக் கொட்டகையில் எட்டு தொழிலாளர்கள் மற்றும் மூன்று சிறிய எந்திரங்களுடன் ஆரம்பித்தார்.

தனது நிர்வாகத் திறமையாலும் விடாமுயற்சியாலும் அந்த நிறுவனத்தை நான்கு பெரிய நிறுவனமாக ஐம்பது கோடி ரூபாய் வருமானம் தரக்கூடிய நிறுவனமாக வளர்த்தெடுத்தார். அதில் எழுபது சதவீதம் மாற்றுத்திறனாளி தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தினார். ஸ்ரீகாந்த் இப்போது ஒரு மிகச் சிறந்த தொழில்முனைவோர்.

ஸ்ரீகாந்தின் சோகக் கதையில் என்ன சவால் வந்தாலும் விடாப்பிடியாக அவற்றை எதிர்கொண்டு அவர் முன்னேறியதுதான் தெரிகிறது. பார்வையற்றவராக பிறந்தது



மட்டுமின்றி, ஏழையாகவும் பிறந்தார். இந்த சமுதாயமும் அவரை எவ்வாறு நடத்தியிருக்கிறது என்பதையும் நம்மால் உணர முடிகிறது. இருந்தபோதும் தனக்கு கிடைத்த கல்வியை மிகச் சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெற்று இளம் வயதில் ஒரு சிறந்த தொழில்முனைவோராக, தன்னம்பிக்கை பேச்சாளராக உருவாகிஇன்றைய இளைஞர்களுக்கு ஓர் முன் உதாரணமாக திகழ்கிறார்.

எல்லாம் சரி, அப்துல் கலாம் அவர்களிடம் சொன்ன அந்தக் குடியரசுத்தலைவர் கனவு என்ன ஆயிற்று என்று நினைவு படுத்தியபோது அதற்கு ஸ்ரீகாந்த் சொல்கிறார்: "வயது என்ற ஒன்று இருக்கிறது. அந்த வயதில் நிச்சயம் என்னை இந்திய ஜனாதிபதியாக நீங்கள் கண்டிப்பாகப் பார்ப்பீர்கள்".

தன்னால் எதுவும் முடியும் என்று கூறும் ஸ்ரீகாந்த் ஒரு மாற்றுத்திறனாளியல்ல, பலரை மாற்றும் திறனாளி என்றுதான் சொல்ல வேண்டும்!

**தகவல்:மன்னை பாண்டியன்**

# நோய்கள் என்பது நோய்கள் அல்ல!



நீங்கள் நோயாளி அல்ல; நீங்கள் வயதாகிக் கொண்டிருக்கிறீர்கள்! நீங்கள் நோயாக நினைக்கும் பல நிலைகள் உண்மையில் நோய்கள் அல்ல. அவை உங்கள் உடல் வயதாகிக் கொண்டிருப்பதற்கான இயல்பான அறிகுறிகள் மட்டுமே!

இது அல்ஜைமர் (Alzheimer) அல்ல; வயதாகும் மூளையின் தற்காப்பு செயல்பாடு. நீங்கள் சாவியை எங்கு வைத்தீர்கள் என்று மறந்தாலும், அதை நீங்களே யோசித்து கண்டுபிடிக்க முடிந்தால் அது மந்தநிலை (Dementia) அல்ல.

கால்கள் சற்று நிலைத்தன்மையில்லாமல் இருப்பது பக்கவாதம் (Paralysis) அல்ல; அது தசைகள் சற்றே பலவீனமடைவதன் அறிகுறி. இதற்கான தீர்வு மருந்து அல்ல; தொடர்ந்து உடலை இயக்குவது மற்றும் நடப்பது மட்டுமே! இது ஒரு நோய் அல்ல. மூளை தனது இயல்பான தூக்க ரிதத்தை மாற்றிக் கொள்வது. தூக்க மாத்திரைகளைத் தவிர்க்கவும். பகலில் சூரிய ஒளியில் இருப்பதும், ஒழுங்கான தூக்க நேரத்தைப் பின்பற்றுவதுமே இதற்குச் சிறந்த வழி.

99% உடல் வலிகள் நோய்கள் அல்ல. எலும்புகள் வயதுடன் சற்றே பலவீனமாகலாம், நரம்புகளின் செயல்பாடு மெதுவாகி வலியை அதிகமாக உணரச் செய்யலாம் (Central Sensitization). இதற்கான சிறந்த மருந்து: மிதமான உடற்பயிற்சி.

முதியவர்களுக்குக் கொழுப்பு அளவு சற்று அதிகமாக இருப்பது இயல்பானது (அது ஹார்மோன்கள் மற்றும் செல்கள் உருவாகத் தேவை). முதியவர்களுக்கு இரத்த அழுத்த அளவு 150/90 mmHg க்குக் கீழ் இருப்பது பொதுவான வழிகாட்டி; இளைஞர்களைப் போல 140/90 ஆக இருக்க வேண்டிய அவசியமில்லை. முதியவர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் சில வார்த்தைகள்:

1. எல்லா உடல் மாற்றங்களும் நோய்கள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

2. மருத்துவ பரிசோதனை அறிக்கைகளால் பயப்பட வேண்டாம்; விளம்பரங்களால் ஏமாற வேண்டாம்.

3. பிள்ளைகளே! பெற்றோரை மருத்துவமனைக்கு மட்டும் அழைத்துச் செல்லாதீர்கள்; அவர்களுடன் *நடக்கவும், சூரிய ஒளியில் இருக்கவும், அமர்ந்து பேசவும் நேரம் செலவிடுங்கள்.

வயது முதிர்வு என்பது எதிரி அல்ல. அது "நான் இன்னும் சிறிது காலம் வாழ விரும்புகிறேன்" என்று சொல்லும் வாழ்க்கையின் ஒரு அழகான நிலை. ஆனால், "சோம்பேறித்தனம்" தான் உண்மையான எதிரி!

ஒரு புற்றுநோய் நிபுணர் பிரித்த மனிதனின் வயது நிலைகள்:

* 50 முதல் 70 வரை – நடுத்தர வயது
* 70 முதல் 80 வரை – பொன்னான வயது
* 80 முதல் 90 வரை – முதுமை
* 90 முதல் இறப்பு வரை – நீண்ட ஆயுள்

தனிமையைத் விரட்டுங்கள் நண்பர்களைச் சேருங்கள்! முதியவர்களுக்கு மிகப்பெரிய பிரச்சினை தனிமை தான். தம்பதிகளில் ஒருவர் முன்பே செல்ல நேரிடலாம். ஒரு கட்டத்தில் பிள்ளைகளுக்குப் பாரமாக மாறுவதாகத் தோன்றலாம். அதனால் நண்பர்களுடன் தொடர்பை இழக்காதீர்கள். அடிக்கடி சந்தித்துப் பேசுங்கள், சிரித்து மகிழுங்கள். உங்கள் வாழ்க்கையை உங்கள் கட்டுப்பாட்டில் வையுங்கள்: எப்போது வெளியே போவது, யாருடன் போவது, என்ன சாப்பிடுவது, எப்படி உடை அணிவது, யாரை அழைக்க வேண்டும், எப்போது தூங்க வேண்டும் என்பதை *நீங்களே தீர்மானியுங்கள். இந்தச் சுதந்திரத்தை இழந்துவிட்டால், பிறரைச் சார்ந்து வாழும் நிலை ஏற்பட்டுவிடும். இந்த பயனுள்ள செய்தியை யாருக்கும் அனுப்பவில்லை என்றால் நீங்கள் தனிமையாக இருப்பதாக அர்த்தம்! உங்களுக்கு முக்கியமானவர்களுக்கும், முதியவர்கள் இருக்கும் குடும்பங்களுக்கும் இதை உடனே பகிருங்கள். ஒருநாள் இதை நினைத்து மகிழ்வீர்கள்!

**தகவல்: வி.குருசாமி. விளையாட்டு உலகம்**

# தோப்புக்கரணம் போட்டா உடம்புக்கு நல்லது !



**ந**மது முன்னோர்கள் வழிபாட்டின் ஒரு பகுதியாக தோப்புக்கரணத்தை வைத்திருந்தார்கள். உண்மையில் அது ஒரு நல்ல உடற்பயிற்சி.

தோப்புக்கரணம் போடும்போது காது மடல்களைப் பிடித்துக் கொள்கிறோம். காது மடல்களில் உடலின் எல்லா உறுப்புகளையும் இணைக்கிற புள்ளிகள் இருக்கின்றன.

காது மடல்களைப் பிடித்துத் தோப்புக்கரணம் போடும் போது உடலின் எல்லா உறுப்புகளுக்கும் செயல்படுவதற்கான தூண்டுதல் கிடைக்கிறது. உடல் இயக்கம் சீர்படுகிறது.

தோப்புக்கரணம் போட விரும்பும் ஒருவர், ஆரம்பத்தில் அவருடைய தோள்பட்டை அளவுக்குக் கால்களை விரித்துவைத்துக்கொண்டுதோப்புக்கரணம் போட வேண்டும்.

பின்னர் பயிற்சியானவுடன் கால்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும். வலது கை விரல்களால் இடதுகாது மடல்களையும், இடது கை விரல்களால் வலது காது மடல்களையும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழ வேண்டும்.

உட்காரும்போது மூச்சை உள்ளிழுக்க வேண்டும். எழும்போது மூச்சை வெளிவிட வேண்டும்.

இவ்வாறு மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுவதால், நமது தண்டுவடத்தில் மூலாதாரத்தில் சக்தி உருவாகும்.

உட்கார்ந்து எழும்போது,காலில் உள்ள சோலியஸ் எனும் தசைக்கு வேலை கொடுக்கிறோம். உடல் முழுக்க இரத்த ஓட்டத்தை சீராக்கும் இதயத்தின் தசைகளைப் போலவே இயங்கக் கூடியது, இந்த சோலியஸ் தசை. இதனால் உடல் முழுவதும் ரத்த ஓட்டம் சீராகும்.

மூன்று நிமிடங்கள் தோப்புக்கரணத்தைத் தொடர்ந்து செய்தால் வேறு எந்த உடற்பயிற்சியும் செய்ய வேண்டியதில்லை.

# புதிய வழியில் ஏமாற்று: கவனமாக இருங்க!



30 நிமிஷம் போதும்... வாழ்க்கையே கடனில் விழுந்து போகலாம். இது சாதாரண போன் மோசடி இல்லை ஊடி இன்னும் ஆபத்தானது.

அவர்கள் உங்கள் பணத்தையும், பாஸ்வேர்டையும், நம்பிக்கையையும் கேட்க மாட்டார்கள். அவர்கள் தேடுவது உங்கள் நல்ல மனசு தான்.

சமீபத்தில் மால்கள், மெட்ரோ ஸ்டேஷன், மார்க்கெட் போன்ற பொதுஇடங்களில் ஒரு புதிய "உதவி கேட்கும் மோசடி" நடக்கிறது.

நன்றாக உடை அணிந்த நடுத்தர வயது அல்லது முதியவர்கள் போல இருப்பார்கள். "எனக்கு போன் பயன்படுத்த தெரியாது", "பென்ஷன்/சப்சிடி பார்க்கணும்", "தவறான பக்கத்தை அழுத்திட்டேன்" என்று சொல்லி, "ஒரு நிமிஷம் என் போனை பார்த்து உதவுங்க" என்று கேட்பார்கள்.

நீங்கள் போனை கைப்பிடித்த உடனே, அது ஏற்கனவே வீடியோ கால் அல்லது ஸ்கிரீன் ரெக்கார்டிங் ஆன நிலையில் இருக்கும். முக அடையாள அனுமதியும் (Face Recognition) இருக்கும்.

அடுத்த பக்கம் யாரோ உங்களை கவனித்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் உதவி செய்கிறேன் என்று நினைப்பீர்கள். ஆனால் உங்கள் பயோமெட்ரிக் தகவல்கள் (விரல் ரேகை, குரல், முகம்) சேகரிக்கப்படும்.

இது சாதாரண மோசடி இல்லை. இது AI பயோமெட்ரிக் அடையாள மோசடி. அவர்களுக்கு உங்கள் பணம் வேண்டாம் – நீங்கள் தான் வேண்டியது.

- போனை தொட்டால் (விரல் ரேகை),
- எண்கள் அல்லது OTP வாசித்தால் (குரல்),
- கேமரா பார்த்து பேசினால் (முகம்),

உங்கள் மூன்று முக்கிய அடையாளங்களும் திருடப்படலாம்.

இப்போது AI மூலம் உங்கள் மாதிரி டிஜிட்டல் குளோன் (நகல் உருவம்) உருவாக்க முடியும்.

அதன் பிறகு என்ன நடக்கும்?

உங்கள் பெயரில் ஆன்லைன் கடன், கிரெடிட் லோன், நிதி வசதி எல்லாம் எடுத்து விடலாம். Face & Voice verification-ஐ கூட கடந்து விடலாம்.

30 நிமிஷத்துக்குள் உங்கள் பெயரில் கிடைக்க கூடிய முழு கடனையும் எடுத்துவிடலாம்.

பிறகு வங்கி மெசேஜ் வந்தபோது தான் தெரியும் —

பணம் போகவில்லை... ஆனால் நீங்கள் லட்சம், கோடி கணக்கில் கடனில் விழுந்திருக்கலாம்.

தெரியாத நபரின் போனை எப்போதும் கையில் தொடாதீர்கள்.

"ஒரு கிளிக் மட்டும்" என்றாலும் கூட செய்யாதீர்கள்.

தெரியாத வீடியோ கால் வந்தால் உடனே துண்டிக்கவும்.

கேமராவை பார்த்து பேசுங்க" என்றால் ஒத்துழைக்காதீர்கள். இந்த செய்தியை பெரியவர்கள், குழந்தைகள், நல்ல மனசுக்கார நண்பர்களுடன் பகிருங்கள். இப்போது மோசடிக்காரர்கள் நல்லவர்களை தான் குறி வைக்கிறார்கள்.

# பாதவெடிப்பு குணமாக எளிய வழிகள்



**பா**தவெடிப்பு என்பது அனைவருக்கும் ஏற்படக் கூடியதாகும். பாதங்களை சரியாக பராமரிக்காததாலும், சருமத்தில் ஈரப்பதம் குறைவதாலும் விரிசல் ஏற்பட்டு பாதவெடிப்பு உண்டாகிறது. அதிலும் குறிப்பாக, பெண்களே அதிக அளவில் பாதவெடிப்பு பிரச்னையை சந்திக்கின்றனர்.

பாதங்களில் ஈரப்பதத்தை பாதுகாத்து பாதவெடிப்பு பிரச்னையிலிருந்து தற்காத்துக் கொள்ள சில எளிய கை வைத்தியங்களைத் தெரிந்து கொள்வோம்:

வாழைப்பழத்தில் வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ளதால் சருமத்தில் ஈரப்பதத்தை பாதுகாக்க உதவுகிறது. வாழைப்பழத்தை நன்கு மசித்து பாதங்களில் தடவி 20 நிமிடங்கள் வரை உலரவிட்டு பின்பு கழுவி வர பாதவெடிப்பு சரியாகும்.தேன்: பாதவெடிப்பை சரி செய்ய தேன் சிறந்த மருந்தாக பயன்படுகிறது. பாதங்கள் மூழ்கும் அளவு வெதுவெதுப்பான நீரை எடுத்து அதில் தேன் கலந்து அதில் பாதங்களை 20 நிமிடங்கள் வைத்திருந்து பின்பு காலை அலம்பி விடவும். வாரத்தில் ஒரு நாள் இப்படி செய்து வரலாம். கற்றாழை: கற்றாழை சாற்றை இரவில் பாதங்களில் தடவி, காலை எழுந்து பாதங்களை கழுவிவிடவும். வாரத்தில் 2 நாட்கள் இப்படி செய்து வர, வறண்ட பாதங்கள் மிருதுவாகும்.

சமையல் சோடா கலந்த வெந்நீரில் 15 நிமிடங்கள் பாதங்களை ஊறவிடவும். பிறகு, ப்யூமிஸ் கல் கொண்டு பாதங்களை தேய்த்து பின் சுத்தமான நீரில் கழுவினால் பாதவெடிப்பு சரியாகும்.

புதிய சரும அணுக்கள் உற்பத்தியாக எலுமிச்சைச் சாறு உதவும். இரவில் எலுமிச்சைச் சாறை பாதங்களில் தடவி, காலை எழுந்தவுடன் பாதங்களை கழுவி விடவும். இப்படி செய்வதாலும் பாதங்களில் வெடிப்பு சரியாகும். மவுத்வாஷ்: வாய்க்கொப்பளிக்க பயன்படுத்தப்படும் மவுத்வாஷில் ஆல்கஹால் இருப்பதால் கால்நகங்களை சுத்தப்படுத்த மவுத்வாஷ் உதவும். எனவே, வெதுவெதுப்பான நீரில் மவுத்வாஷை கலந்து, அக்கலவையில் 20 நிமிடங்கள் வரை பாதங்களை வைத்திருந்து பிறகு ப்யூமிஸ்கல் கொண்டு தேய்த்து வந்தால் பாத வெடிப்பு சரியாகும். இதனை வாரம் ஒருமுறை செய்து வருவது மிகவும் நல்லது.

# இ-மெயில் கண்டுபிடித்த ராஜபாளையம் சிவா அய்யாதுரை

மனித குலத்தின் ஒரே தொடர்பு ஊடகமாகப் பரிணமித்துள்ள இமெயிலை கண்டுபிடித்தவர் ஒரு தமிழர். பெயர் சிவா அய்யாதுரை. வசிப்பது அமெரிக்காவில். டைம் பத்திரிகை இவரை 'டாக்டர் இமெயில்' என்று அழைக்கிறது. வால் ஸ்ட்ரீட் ஜர்னல், வாஷிங்டன் போஸ்ட், நியூயார்க் டைம்ஸ் என அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள் அனைத்தும் 'இமெயிலை கண்டுபித்தவர்' என இவரைக் கொண்டாடுகின்றன. உலகின் மிகச் சிறந்த அறிவு ஜீவி என போற்றப்படும், பேராசிரியர் நோம் சாம்ஸ்கி, 'டாக்டர் சிவாதான் இமெயிலைக் கண்டுபிடித்தவர்' என்று செல்லும் இடம் எல்லாம் பேசுகிறார். உலகின் மிக முக்கியமானதும், மிகப் பெரியதுமான அமெரிக்காவின் ஸ்மித்சோனியன் ஆவணக் காப்பகம் (smithsonian museum), "மின்சார விளக்கு, செயற்கை இதயம் போன்ற மிக முக்கியமான கண்டுபிடிப்புகளின் வரிசையில் இமெயிலையும் மதிப்பிட வேண்டும்" என்று வர்ணிக்கிறது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற எம்.ஐ.டி. (Massachusetts Institute of Technology) பல்கலைக்கழகத்தில் Systems Visualization மற்றும் Comparative Media Studies ஆகிய இரு துறைகளில் பேராசியராக இருக்கும் சிவா அய்யாதுரை, அதே பல்கலைக்கழகத்தில் நான்கு பட்டங்களும் ஒரு பி.ஹெச்.டி. பட்டமும் பெற்றவர். நோம் சாம்ஸ்கி தலைமையில், இந்தியாவின் சாதிய அடுக்குநிலை தொடர்பாக ஆய்வு செய்தவர். அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் ஏழு நிறுவனங்களை தொடங்கி நடத்தி வருபவர். (அதில் ஒரு நிறுவனத்தின் வாடிக்கையாளர்களில் 'வெள்ளை மாளிகை'யும் உண்டு).இனி அவரைப் பேச விடுவோம்...


"என் அப்பா அய்யாதுரைக்கு சொந்த ஊர் ராஜபாளையம் அருகே உள்ள முகவூர் என்ற கிராமம். அப்பா, அம்மா இருவரும் அந்தக் காலத்திலேயே நன்றாகப் படித்தவர்கள். அம்மா, அப்போதே எம்.எஸ்.சி. கணிதம் படித்து மாநில அளவில் பதக்கம் வென்றவர். எனக்கு விவரம் தெரிவதற்கு முன்பே குடும்பம் மும்பைக்கு இடம்பெயர்ந்து விட்டது. அங்கு செம்பூர் என்ற இடத்தில் குடியிருந்தோம். அப்பா, யூனிலீவர் நிறுவனத்தில் பெரிய பொறுப்பில் இருந்தார். அம்மா, டான்பாஸ்கோ பள்ளியில் கணித ஆசிரியையாக பணியாற்றினார். 5 வயதிலேயே எனக்கு படிப்பின் மீது மிகப்பெரிய ஆர்வம் இருந்தது. என்னை மேற்கொண்டும் நன்றாகப் படிக்க வைக்க



வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக எங்கள் குடும்பம் அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்தது."

"நியூஜெர்ஸியில் வீடு. நூவர்க் என்ற சிறிய பகுதியில் இருந்த லிவிங்ஸ்டன் பள்ளியில் படித்தேன். 1978ஆம் ஆண்டு, எனக்கு 14 வயதாக இருக்கும்போது நியூயார்க் பல்கலைக்கழகம் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் இருந்து 40 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து கம்ப்யூட்டர் புரோகிராமிங் மொழிகளைக் கற்றுக்கொடுத்தது,இந்தியாவில் கோடை காலத்தில் பிள்ளைகளுக்கு நீச்சல் கற்றுக்கொடுப்பதைப் போல... அதில் FORTRAN IV என்ற புரோகிராமிங் மொழியை கற்றுக்கொண்டேன். அந்தப் பயிற்சியில் பங்கெடுத்த ஒரே இந்திய மாணவன் நான்தான். ஆனாலும் எனக்கு பள்ளிப்படிப்பின் மீதான ஆர்வம் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தது."

"நான் பள்ளியை விட்டு நிற்கப் போவதாக அம்மாவிடம் சொன்னேன். அப்போது அம்மா, 'யுனிவர்சிட்டி ஆஃப் மெடிசின் அண்ட் டென்டிஸ்ரி'யி™ (University of Medicine and Dentistry of New Jersey) டேட்டா சிஸ்டம் அனலிஸ்ட் ஆகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். அவர் தன்னுடன் பணிபுரிந்த, லெஸ் மைக்கேல்சன் என்ற பேராசிரியரிடம் என்னை அழைத்துச் சென்றார். மைக்கேல்சன், அப்போது என்ற பேராசிரியரிடம் என்னை அழைத்துச் சென்றார். மைக்கேல்சன், அப்போது அந்த மருத்துவமனையின்




அன்றாட நடவடிக்கைகளை, கம்ப்யூட்டர் வழியாக ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அவர் என்னைத் தன் ஆராய்ச்சி உதவியாளர்களில் ஒருவராகச் சேர்த்துக்கொண்டார். நான் பள்ளிக்கூடம் சென்றதுபோக மீதமிருந்த நேரத்தை எல்லாம் மைக்கேல்சனின் ஆராய்ச்சிக் கூடத்திலேயே செலவழித்தேன். இரவு, பகலாக அங்கேயே கிடந்தேன். சவால் நிறைந்த அந்தப் பணி என் மனதுக்குப் பிடித்திருந்தது."

"அப்போது அந்த மருத்துவமனையில் மூன்று கட்டடத் தொகுதிகள் இருந்தன. ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனியாக 'மெமோரண்டம்' எழுதுவார்கள். நோயாளி பற்றிய விவரம், மருத்துவர் பற்றிய விவரம், to, from, subject எல்லாம் எழுதப்பட்ட அந்த மெமோரண்டத்தை அங்கிருக்கும் தபால்பெட்டி மூலம் பரிமாறிக் கொள்வார்கள். இதை அப்படியே எலெக்ட்ரானிக் மயப்படுத்த வேண்டும். அந்த மெமோரண்டத்தை மருத்துவமனையில் உள்ள எந்த ஒரு கம்ப்யூட்டரில் இருந்தும், மற்றொரு கம்ப்யூட்டருக்கு எலெக்ட்ரானிக் வடிவத்தில் அனுப்ப முடிய வேண்டும். இதுதான் எங்கள் நோக்கமாக இருந்தது. இந்த ஆராய்ச்சியில் நான் உருவாக்கியதுதான் இமெயில் சிஸ்டம்."

"FORTRAN IV மொழியில் 50 ஆயிரம் வரிகள் கொண்ட அந்த புரோகிராமை எழுதியபோது எனக்கு வயது 14. அது 1978ஆம் ஆண்டு. அதற்கு email என்று பெயரிட்டேன். electro mail என்பதன் சுருக்கம் அது. FORTRAN மொழியில் ஒரு புரோகிராமில் அதிகப்பட்சம் 5 எழுத்துருக்கள்தான் பயன்படுத்த முடியும் என்பதாலும், email என்ற சொல் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்ததாலும் அந்தப் பெயரை வைத்தேன். அகராதியில் அதற்கு முன்பு email என்ற வார்த்தையே கிடையாது."

"1981ஆம் ஆண்டு எனது கண்டுபிடிப்புக்காக, 'வெஸ்டிங்ஹவுஸ் சயின்ஸ் டேலன்ட்' (Westinghouse Science Talent) விருதுக்காகவிண்ணப்பித்தபோது, 'தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார விளக்கை கண்டுபிடித்த சமயத்தில் அது உலகத்தை ஆளப்போகிறது என யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஒரு காலத்தில் இந்தக் கண்டுபிடிப்பும் அப்படி ஆகலாம்' என்று குறிப்பு எழுதினேன். இன்று அதுதான் நடந்திருக்கிறது."

"இமெயிலுக்கான 'காப்பி ரைட்ஸ்' இன்றும் என்னிடம்தான் இருக்கிறது. நான் 1981, செப்டம்பர் மாதம் எம்.ஐ.டி. பல்கலைக்கழகத்துக்கு வந்தேன். 1982 ஆகஸ்ட் 30ஆம் தேதி இமெயிலுக்கான முதல் காப்புரிமையை அமெரிக்க அரசிடம் இருந்து பெற்றேன். அப்போது

இண்டர்நெட் என்பது வரவில்லை. ஆகவே இமெயில் என்பது நிறுவனங்கள் நிர்வாக ரீதியாக பயன்படுத்தும் ஒரு தொழில்நுட்பமாக இருந்தது. 1989இல்தான் இண்டர்நெட் வழியே இமெயில் அனுப்பும் சோதனை முயற்சிகள் தொடங்கின. 96ஆம் ஆண்டு ஹாட்மெயில் மிகப் பிரபலமாகக் காரணம், அப்போது உலகம் முழுவதும் இண்டர்நெட் அதிவேகமாகப் பரவிக்கொண்டிருந்தது. அதன்பிறகு 97இல் யாஹூ வந்தது. 99இல் செல்போன் வழியே இமெயில் அனுப்பும் வசதியை பிளாக்பெர்ரி துவங்கியது. நான்கு வருட 'பீட்டா' பரிசோதனைக்குப் பிறகு 2007இல் ஜிமெயில் வந்தது!"

"ஆனால், டேவிட் கிராக்கர் (David Crocker), ராய் டாமில்சன் (Ray Tomlinson) ஆகியோரின் பெயர்களும் இமெயில் கண்டுபிடித்தவர்கள் பற்றிய ஆய்வுகளில் பேசப்படுகின்றன.."

"அது பழையகாலம். நான்தான் இமெயிலை கண்டுபித்தேன் என்பதை ஸ்மித்சோனியம் ஆவணக் காப்பகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தபிறகு இந்த சர்ச்சை ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்டது. 1978ஆம் ஆண்டு உலகின் முதல் இமெயிலை எனது வழிகாட்டியான பேராசிரியர் லெஸ் மைக்கேல்சனுக்கு அனுப்பினேன். அது ஒரு டெஸ்ட் மெயில். அதன் ஒரிஜினல் புரோகிராமிங் கோடு, இப்போதும் ஸ்மித்சோனியம் ஆவணக் காப்பகத்தில் இருக்கிறது. பேராசிரியர் நோம் சாம்ஸ்கி என் ஆய்வுகளின் நேரடி சாட்சியாக இருக்கிறார். அவர் எனது கண்டுபிடிப்பைப் பற்றி பல இடங்களில், பேசியும் எழுதியும் வருகிறார். புகழ்பெற்ற ‘டைம்’ பத்திரிகை, தனது தொழில்நுட்பப் பிரிவின் பதிப்பில் எனது கண்டுபிடிப்பை அங்கீகரித்து என்னுடைய நீண்ட பேட்டி ஒன்றையும் வெளியிட்டது."



"டேவிட் கிராக்கர் கண்டுபிடித்ததாக அமெரிக்காவில் சிலர் அப்போது சொல்லி வந்தனர்.அவர் கண்டுபிடித்தது ‘டெக்ஸ்ட் மெசேஜ்’ (text message) அனுப்பும் தொழில்நுட்பத்தைத்தான். புரியும்படி சொல்வதானால், இப்போது ஒரு செல்போனில் இருந்து இன்னொரு செல்போனுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்புகிறோம் இல்லையாஞ் அதைபோல அவர் வெறுமனே டெக்ஸ்ட் மெசேஜ் பரிமாறிக்கொள்வதை கண்டறிந்தார். அதை இமெயில் என்று சொல்ல முடியாது. அப்படியானால் நாம் தந்தி அனுப்புவதைத்தான் இமெயில் என்று அழைக்க வேண்டியிருக்கும். கார் ஓடுவதற்கான நான்கு சக்கரங்களை கண்டுபிடித்துவிட்டு 'நான் கார் கண்டுபிடித்துவிட்டேன்' என்று சொல்வதைப் போலதான் இதுவும். மாறாக, இமெயில் என்பது ஒரு முழுமையான சிஸ்டம். இன்று நாம் பயன்படுத்தும் Inbox, Outbox, Drafts, To, From, Date, Subject:, Body, Cc, Bcc, Attachments, Folders, Compose, Forward, Reply, Address Book, Groups, Return Receipt, Sorting உள்ளிட்ட 86 வகையான இமெயில் புரோகிராமிங்கை எழுதி, வடிவமைத்தது நான்தான். இதுதான் முழுமையான இமெயில் சிஸ்டம். ராய் டாமில்சனை பொருத்தவரை அவர் இமெயிலில் இன்று பயன்படுத்தும் @ குறியீட்டைக் கண்டுபிடித்தார். அதற்கு மேல் அவரது பங்களிப்பு இதில் எதுவும் இல்லை."

"1993ஆம் ஆண்டு நான் பி.ஹெச்.டி. ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது, கிளிண்டன் அமெரிக்க அதிபராக இருந்தார். அப்போது வெள்ளை மாளிகைக்கு நாள் ஒன்றுக்கு 5,000 இமெயில்கள் வந்துகொண்டிருந்தன. அவற்றை நிர்வகிக்க நூற்றுக்கணக்கானவர்கள் வேலைக்கு இருந்தாலும், அது நாளுக்கு நாள் சிக்கலானதாக மாறிக் கொண்டிருந்தது. ஆகவே, அந்த மெயில்களை வகை வாரியாகப் பகுத்துப் பிரிக்கும் தானியங்கி தொழில்நுட்பத்தை கண்டறிவதற்கான போட்டி ஒன்றை அறிவித்தது வெள்ளை மாளிகை. பல்வேறு நிறுவனங்களும், தனிநபர்களுமாக 147 பேர் அதில் கலந்துகொண்டோம். இறுதியில் நான் கண்டறிந்த தொழில்நுட்பம் தான் வெற்றிபெற்றது. அதற்கு நான் ‘எக்கோமெயில்’ (EchoMail) என்று பெயரிட்டேன். இப்போதும் வெள்ளை மாளிகையில் இந்தத் தொழில்நுட்பம்தான் நடைமுறையில் இருக்கிறது."

"பிறகு இந்த 'எக்கோமெயிலை' ஒரு நிறுவனமாகத் தொடங்கினேன். இன்று உலகின் மிக முக்கியமான நிறுவனங்கள் இதன் வாடிக்கையாளர்கள். கடந்த ஆண்டு, கிட்டத்தட்ட மூடப்படும் நிலையில் நஷ்டத்தில் இயங்கிய அமெரிக்க தபால் துறையை எனது புதிய இமெயிலிங் சிஸ்டம் மூலம் லாபகரமாக மாற்றியபோது, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பில் இருந்து தப்பினார்கள். அமெரிக்க ஊடகங்கள் என்னைப்பற்றி பெரிதாக எழுதினார்கள். ஆனாலும் எனக்கு இந்தியாவில் பணிபுரியவே விருப்பம்!" என்கிறார் ராஜபாளையம் சிவா அய்யாதுரை.

**தகவல்:அம்ரா பாண்டியன்**

# சென்னை பெருநகர் காவல்துறை சார்பில் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி!














# கெட்டது நடந்தாலும் நன்மை உண்டு!

## திருக்குறளை மேற்கோள் காட்டி புலவர் த.கு.கருணாநிதி தரும் விளக்கம்!



**கே**டு வந்தால் கவலை வேண்டாம். கெட்டது வந்தால் அதிலும் ஒரு நன்மை காணலாம். உறவை அறிய அஃதோர் வாய்ப்பாக அமையும் என்கிறார் வள்ளுவர்.

"கேட்டினும் உண்டோர் உறுதி,

கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்" என்கிறார் திருவள்ளுவர்..

நீட்டி அளப்பதற்கு ஒரு கோல் உண்டு. கஜக்கோல் என்பது பழம்பெயர்.மீட்டர் கோல் என்பது புதுப்பெயர்.

வள்ளுவர் காலத்திலேயே இத்தகு கோல் இருந்தது. அதுவும் நீட்டி அளக்கும் கோலாக இருந்தது. நீட்டி அளப்பது என்றால் அவ் அளவுகோலை மடக்கியும் வைத்துக் கொள்ளலாம். கிளைஞர் என்றால் உறவினர்.

ஒரு மரத்தின் கிளை போன்றவர்கள். ஒவ்வொரு மரத்துக்கும் கிளை உண்டு. கெட்டதில் ஒரு நல்லதாம்.

எந்த உறவினர் நாம் கெட்டுப்போன பொழுது உதவுகின்றாரோ அவரே நல்ல உறவாம். நம் உறவினரை அளந்து பார்க்க, நல்லவனா அன்றிக் கெட்டவனா என்று பார்த்திட இதுவே தருணம் என்கிறார்.

ஆலமர விழுது போல உறவு அமைய வேண்டும். சீமைக்கருவேல உறவு வேண்டாம். அண்ணனோ, தம்பியோ, மாமனோ, மைத்துனனோ, தாயோ, தந்தையோ

எந்த உறவாக இருப்பினும் அளந்து பார் என்கிறார். மடக்கி வைத்திருக்கும் அளவு கோலை விரித்துக் கேடு வந்த பொழுது மனதால் அளந்து பாருங்கள்.

அப்போது தெரியும். சேரத்தகுந்த உறவா? சேரத்தகாத உறவா? பல்லக்கில் பவனி வரும் போது உறவைக் கவனிக்காதே? பசியோடு களைத்து நடக்கையில் உறவைக் கவனி! உலகம் புரியும்.

# வகுப்பு தோழர்களும் வாழ்க்கை விசித்திரங்களும்!



**வ**குப்புத் தோழர்களைப் பற்றி நினைக்கும்போது வேடிக்கையும் சோகமும் கலந்த ஒரு உணர்வு ஏற்படுகிறது.

சிறு வயதில், மரத்தாலான இருக்கைகளில் அருகருகே அமர்ந்திருக்கும்போது, எல்லாம் சமமாகத் தோன்றும்.

ஒரே மாதிரியான சீருடைகளை அணிவோம், ஒரே ஆசிரியர்களைப் பற்றிப் புகார் செய்வோம், ஒரே மாதிரியான பெரிய கனவுகளைக் காண்போம்.

வாழ்க்கை நம்மை நியாயமாக நடத்தும் என்று இளமைக்கே உரிய அந்த அறியாமையுடன் கூடிய நம்பிக்கையை நாம் கொண்டிருப்போம்.

வகுப்பில் முதலிடம் பிடித்தவர் வாழ்க்கையிலும் முதலிடம் பிடிப்பார் என்றும், சிரமப்பட்டவர் எப்போதும் சிரமப்படுவார் என்றும், முயற்சிக்கு எப்போதும் வெற்றி கிடைக்கும் என்றும் நம்புவோம்.

ஆனால் வாழ்க்கை என்பது ஒரு வகுப்பறை அல்ல. வாழ்க்கை ஒரு தந்திரசாலி; எதிர்பாராத திருப்பங்களை விரும்பும் ஒரு குறும்புக்காரக் கதைசொல்லி அது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு நாள்... மதச் சடங்குகள், திருமணங்கள், இறுதிச் சடங்குகள், விமான நிலையங்கள் அல்லது சூப்பர் மார்க்கெட் என எங்காவது ஒரு இடத்தில் நாம் மீண்டும் சந்திக்கிறோம்.

அப்போது, யாரும் நமக்குச் சொல்லாத ஒரு உண்மையை நாம் திடீரெனக் காண்கிறோம்.

வீட்டுப்பாடங்களைச் செய்யாத அந்தச் சிறுவன் இப்போது ஒரு பிரம்மாண்டமான மாளிகைக்குச் சொந்தக்காரனாக இருக்கிறான்.

கல்வியில் எல்லாப் பரிசுகளையும் வென்றவன், இன்றும் தன் அடையாளத்தைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

எப்போதும் அமைதியாக இருந்தவன் இப்போது நிறுவனங்களின் உயர்மட்டக் கூட்டங்களை வழிநடத்துகிறான்; ஆனால் ஒரு காலத்தில் விவாதங்களில் முன்னிலை வகித்தவன், ஒரு வாய்ப்புக்காகக் காத்திருந்து அமைதியாக அமர்ந்திருக்கிறான். அந்த வாய்ப்போ ஒருபோதும் வருவதில்லை.

அப்போது நாம் நம்மையே

கேட்டுக்கொள்கிறோம்: இது எப்படி நடந்தது?

வாழ்க்கை வகுப்பறையின் விதிகளைப் பின்பற்றுவதில்லை என்று யாரும் நம்மிடம் சொல்லவில்லை. அதற்கு அதற்கே உரிய மர்மமான வழிகள் உள்ளன.

99% கடின உழைப்புடன் 1% அதிர்ஷ்டமும் முக்கியம் என்பது.

புத்திசாலித்தனம் மதிப்புமிக்கதுதான், ஆனால் சில சமயங்களில் தொடர்புகள் (connections) அதைவிட முக்கியமாகிவிடுகின்றன என்பது.

சிலர் சிறந்தவர்கள் என்பதற்காக அல்ல, சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருந்ததால் முன்னேறுகிறார்கள் என்பது.

தேர்வுத் தாள்களைப் போல வாழ்க்கை நமக்கு மதிப்பெண்களை வழங்குவதில்லை; அது பகடையை உருட்டுகிறது, சில சமயங்களில் அதன் முடிவுகள் வியக்கத்தக்கவையாகவோ அல்லது குழப்பமானவையாகவோ இருக்கின்றன.

ஆனால் பொறுங்கள், இதிலெல்லாம் ஒரு நல்ல பக்கமும் இருக்கிறது:





வாழ்க்கை நம்மை எவ்வளவு தூரம் சிதறடித்திருந்தாலும், வகுப்புத் தோழர்கள் மீண்டும் சந்திக்கும்போது, அந்த இடைப்பட்ட ஆண்டுகள் மறைந்துவிடுகின்றன.


பதவிகள் முக்கியமல்ல. வங்கிக் கணக்குகள் பேசுவதில்லை.மறந்துபோன செல்லப்பெயர்கள் மற்றும் ஒருபோதும் மறக்கமாட்டோம் என்று சத்தியம் செய்த ஆசிரியர்களின் பெயர்களை நினைவுகூர்ந்து சிரிக்கிறோம் (இப்போது அவர்களை நினைவுகூரவே நாம் சிரமப்படுகிறோம்).

ஒரு கண நேரத்திற்காவது, எதிர்பாராத திருப்பங்களைக் கொண்ட வாழ்க்கை நம்மை ஆட்கொள்வதற்கு முன்பு, கனவுகளுடன் வாழ்ந்த அந்த இளமைக்காலத்திற்கு நாம் திரும்பிச் செல்கிறோம். ஒருவேளை, அதுதான் உண்மையான பாடமாக இருக்கலாம்:

*வாழ்க்கையில் வெற்றி என்பது யாரிடம் அதிக செல்வம் இருக்கிறது என்பதைப் பொறுத்தது அல்ல; மாறாக, யார் இன்னும் தன் நண்பர்களை நினைவுகூரவும் அவர்களைச் சென்றடையவும் கூடிய ஒரு இதயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதில்தான் அது அடங்கியுள்ளது..

**விளையாட்டு உலகம் குருசாமி**

"**நா**ன் அடிச்சா தாங்க மாட்ட .நாலு மாசம் தூங்க மாட்ட மோதி பாரு ஊரு போய் சேர மாட்டே". என்று பாடிக்கொண்டே மாலை நேரத்தில் உள்ளே வந்தார் கபாலிகான்.




"என்ன பாட்டு எல்லாம் பலமா இருக்கு "என்று சொன்னபடியே சூடாக காபி கொடுத்து வரவேற்றோம்.

வர்ற வழியில முதலமைச்சர் விஜய் வந்ததை பார்த்தேன் அதனால இந்த பாட்டு என்றவர் மக்களை சந்திக்கவே இல்லை என்று எதிர்க்கட்சிகள்

தேர்தலின் போது சொன்னபோது, வெற்றி பெற்றால் உங்களை தேடி நானே வருவேன் என்று சொன்னார் விஜய்.

அதைத்தான் இப்போது நிறைவேற்றுகிறாரா என்பது தெரியவில்லை.

**என்ன சொல்றீங்க?**

கடந்த ஒரு வாரமா சென்னையின் பல பகுதிகளுக்கு விஜய் ஆய்வு செய்து வருகிறார்.

**எப்படி?**

கோட்டைக்கு செல்லும் முதலமைச்சர், மாலை வேளைகளில் ஏதேனும் ஒரு இடத்துக்கு செல்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்.

**ஓஹோ!**

மெட்ரோ ரயில் பயணம், இயற்கை எரிவாயு மையம், மற்றும் அரசு மருத்துவமனை. மெட்ரோ ரயில் ஆய்வு, ஓமந்தூரார் நிலையத்தில் இருந்து நந்தனம் வரை மெட்ரோ ரயிலில் பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டார்.

101 அடி உயரத்தில் உள்ள மெட்ரோ கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டார். பயணிகளிடம் குறைகளைக் கேட்டறிந்ததுடன், கட்டுப்பாட்டு அறையையும் ஆய்வு செய்தார்.

சேத்துப்பட்டில் உள்ள மக்கும் குப்பைகளிலிருந்து இயற்கை எரிவாயு தயாரிக்கும் மையத்தை ஆய்வு செய்தார். எழும்பூர் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகளைப் பார்வையிட்டார். பெரம்பூரில் தொகுதி அலுவலகத்தை திறந்து வைத்தார். நந்தனத்தில் உள்ள எம் .சி .ராஜா விடுதியில் திடீரென்று ஆய்வு செய்தார்.



இப்படி தினம் தினம் மக்களை சந்திக்கிறார்.

**நல்ல விஷயம் தானே?**

ஆனால் எதிர்கட்சிகள் வழக்கம் போல இதை விமர்சனம் செய்கிறார்கள்.

**என்னவாம்?**

முதல்வர் விஜய் இப்படியாக ஆய்வு செய்வது இணையத்தில் எதிர்கருத்துகளையும் பெற்று வருகிறது. இந்தியாவின் பல மாநில முதல்வர்கள் தங்கள் மாநிலங்களில் ஆய்வு மேற்கொள்ளும் நிலையில் விஜய் செய்வது மட்டும் ஏன் தனித்துவமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் காட்டப்படுகிறது என்ற கேள்வியைப் பலரும் எழுப்பியுள்ளனர்.

**சென்னை மட்டும் தானா?**

இல்லை அடுத்து காஞ்சிபுரம் . ஏற்கனவே கரூர் போய் வந்தது தெரியும். இப்படி ஒவ்வொரு மாவட்டமாக செல்ல இருக்கிறார் . பொதுமக்கள் திரளாக திரண்டு வருவதால் அடுத்து வரும் உள்ளாட்சித் தேர்தலை தைரியமாக எதிர்கொள்வோம் என்று த.வெ.க வினர் உற்சாகமாக கொண்டாடுகிறார்கள்.

**கூட்டணி கட்சிகள் என்ன சொல்கிறார்கள்?**

கூட்டணிக்கு ஆதரவு தந்து ஆட்சியை நீடிக்கவைத்து இருக்கிறார்கள். அதே நேரத்தில் அவ்வப்போது ஏதாவது ஒரு கருத்தை சொல்லி

தாங்கள் சிறந்த எதிர்க்கட்சிகள் என்பதை நிரூபிப்பதற்கு படாத பாடு படுகிறார்கள்.

**எப்படி சொல்றீங்க?**

சி.பி.எம், சி.பி.ஐ, வி.சி.க ஆகிய கட்சிகள் அவ்வப்போது ஏதாவது குரல் கொடுத்து கொண்டே வருகின்றன. குறிப்பாக நீட் தேர்வின் போது மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தடியடிபோன்ற விஷயங்களில் தங்களது கருத்துக்களை அரசுக்கு எதிராக பதிவு செய்து வருகிறார்கள்.

**த.வெ.க. என்ன நினைக்கிறது?**

அவர்கள் இதுபோன்ற கருத்துக்களுக்கு பதில் சொன்னதே இல்லை. அமைச்சர்கள் உட்பட எல்லோரும் தி.மு.கவிற்கு மட்டுமே பதில் சொல்லுகிறார்கள். மற்ற கட்சிகளை விஜய் தேர்தல் பிரச்சாரத்திற்கு குறிப்பிட்டது போல மற்றும் பலர் என்று தான் இன்றைக்கும் வைத்திருக்கிறார்கள்.

பா.ம.க. வைப் பொறுத்தவரை கூடுமானவரை



தோழமை உணர்வோடு அணுகுவதும் அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பதாக இருந்தால் மென்மையாக தெரிவிக்கிறார்கள். இது வி.சி.கவை அவ்வப்போது உள்ளுக்குள் கோபப்பட வைக்கிறது.

அது மட்டும் அல்லாமல் டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஒரு கூட்டத்தில் பேசும்போது"தமிழ்நாட்டில் உண்மையிலேயே புரட்சி ஏற்பட்டிருக்கிறது. 60 ஆண்டு காலம் மாறி மாறி இரண்டு கட்சிகள் செய்த ஆட்சியை பார்த்து பார்த்து சலித்து போனவர்கள் அவர்களை தூக்கி எறிந்து இருக்கிறார்கள். இது மிகப்பெரிய புரட்சி "என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**அடடே!**

இப்போதைக்கு தி.மு.கவுக்கு அடுத்து த.வெ.க.வுக்கு நேர் எதிராக இருப்பது செந்தமிழன் சீமான் அவர்களின் நா.த.க மட்டும்தான்.

**என்ன சொல்கிறீர்கள்?**

கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

**ஆமாம்!**

அதற்கு இப்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது! இதற்கு நாம் தமிழர் கட்சியை போட்ட வழக்கின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தான் காரணம்.

உள்ளாட்சி தேர்தல் நடப்பதற்கு முன்பாக எந்தெந்த கட்சிகள் எப்படியெல்லாம் காட்சிகளை மாற்றப் போகின்றன என்பதை பொறுத்திருந்து பார்க்கத்தான் வேண்டும். வரட்டா என்று சொல்லியபடி "ஓடு ஓடு ஓடு வரான் பாரு வேட்டைக்காரன்" என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் கபாலி கான்.



# பூரி ஜெகன்நாதருக்கு 56 வகை பிரசாதங்கள்

பூரி ஜெகந்நாதர் ஆலயத்தில் ஜெகந்நாதருக்கு பிரசாதமாக வழங்கப்படும் 'சப்பன் போக்' (Chapan Bhog) என்பது மிகவும் புகழ்பெற்றது. 'சப்பன்' என்றால் இந்தி மற்றும் வடமொழிகளில் 56 என்று பொருள். ஜெகந்நாத சுவாமிக்கு தினமும் 56 வகையான உணவுப் பதார்த்தங்கள் நெய்வேத்தியமாக மஹாபிரசாதம் என்று படைக்கப்படுகிறது.

இந்த 56 வகையான பிரசாதங்கள் அனைத்தும் முற்றிலும் பாரம்பரிய முறைப்படி, எந்தவிதமான செயற்கை சுவையூட்டிகளோ அல்லது உருளைக்கிழங்கு, தக்காளி, முட்டைகோஸ் போன்ற அந்நிய நாட்டு காய்கறிகளோ சேர்க்கப்படாமல் தயாரிக்கப்படுகின்றன.

கிருஷ்ணனுக்கு யசோதா தினமும் 8 வகையான உணவு பண்டங்களை செய்து கொடுப்பார்களாம். ஒருமுறை 7 நாட்கள் கோவர்த்தன மலையை தூக்கி கிராம மக்களையும், பசுக்களையும் காப்பாற்றினார் கோபாலன்.

அந்த 7 நாட்களும் கிராம மக்கள் கோவிந்தனுக்கு தினமும் விதவிதமான 8 உணவு பண்டங்களை செய்துக் கொடுத்துள்ளனர். அப்படி செய்ததில் 56 உணவு பண்டங்கள் வந்துள்ளது.

அந்த அடிப்படையிலே ஜெகந்நாதருக்கு 56 நெய்வேத்தியங்கள் படைக்கப்படுகின்றன

அன்ன வகைகள் (Rice Dishes)

1. சாதா அன்னம் – சாதாரண பச்சரிசி சாதம்.
2. கானிகா – நெய், சர்க்கரை, முந்திரி, உலர் திராட்சை சேர்த்த இனிப்பு சாதம்.
3. நெய் அன்னம் –தூய்மையான நெய் கலந்த சாதம்.
4. தஹி பக்காலா – தயிர் சாதம்.
5. மிட்டோ பக்காலா – சர்க்கரை மற்றும் நீர் சேர்த்த அன்னம்.
6. தஹி அன்னம் – இஞ்சி, தயிர் கலந்த அன்னம்.
7. காஜா பக்காலா – தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்ட சாதம்.
8. பியாலா சாதம் – சீரகம் மற்றும் நெய் சேர்த்த சாதம்.

9 ஓரியா சாதம் – ஒரு குறிப்பிட்ட பக்குவத்தில் வடிக்கப்படும் சாதம்.

பருப்பு மற்றும் குழம்பு வகைகள் (Dal & Curries)

10. மிட்டோ தாலி –இனிப்பு பருப்பு.
11. ஹரதா தாலி – துவரம் பருப்பு குழம்பு.

12 .முக தாலி –பாசிப்பருப்பு கடைசல்.

13. பெசர தாலி – கடுகு அரைத்து ஊற்றிய பருப்பு குழம்பு.
14. சாகா – கீரை கடையல் (முக்கியமாக வெந்தயக் கீரை).
15. மசூரா – பலாக்கொட்டை, பூசணிக்காய் போன்ற காய்கறிகள் சேர்த்த கூட்டு.
16. தால்மா –பருப்புடன் காய்கறிகள் (வாழைக்காய், சேப்பங்கிழங்கு) சேர்த்து சமைக்கப்படும் புகழ்பெற்ற உணவு.




17. சாத்து – வறுத்த கடலை மாவு கலவை.
18. பகாரா தாலி – தாளித்த பருப்பு

இனிப்புகள் மற்றும் பலகாரங்கள் (Sweets & Baked Items)

19. காஜா – மைதா மற்றும் சர்க்கரை பாகு கொண்டு செய்யப்படும் பூரியின்

புகழ்பெற்ற உலர் இனிப்பு.

20. கடா - கோதுமை மாவால் செய்யப்படும் ஒரு வகை இனிப்பு.
21. அமாலு - ரவை, பால், சர்க்கரை சேர்த்து செய்யப்படும் மாலின்கா போன்ற இனிப்பு.
22. பூரி - நெய்யில் பொரித்த பூரி.
23. லட்டு - பூந்தி லட்டு.
24. மகாடு லட்டு - உளுந்து மற்றும் நெய் சேர்த்து செய்யப்படும் லட்டு.
25. காகரா - தேங்காய் பூரணம் வைக்கப்பட்ட இனிப்பு பலகாரம்.
26. லஹுனி காஜா ரு வெண்ணெய் சேர்த்து செய்யப்படும் மென்மையான காஜா.
27. சுகாரோ - ஒரு வகை வறுத்த இனிப்பு வடை.
28. பாகா - சர்க்கரை பாகில் ஊறிய பலகாரம்.
29. மண்டா - ஆவியில் வேகவைக்கப்பட்ட கொழுக்கட்டை போன்ற இனிப்பு.
30. பப்பரி - மொறுமொறுப்பான மைதா பலகாரம்.
31. நல்ஜி - ஒரு வகை நீண்ட வடிவ இனிப்பு.
32. சுவரா - உலர் மாவு பலகாரம்.
33. கானுரி - சிறிய அளவிலான உலர் இனிப்புகள்.
34. படா - உளுந்து வடை.
35. சிறு படா - சிறிய உளுந்து வடை.
36. தாடியா - தாமரை இதழ் வடிவிலான பலகாரம்.
37. கிலா - நெய்யில் பொரித்த சிறிய இனிப்பு.
38. அரிக்கா - ஒரு வகை பாரம்பரிய தட்டை பலகாரம்.
39. தகாரா - சர்க்கரை தூவப்பட்ட பலகாரம்.
40. பாகா அமாலு - சர்க்கரை பாகில் ஊறவைத்த அமாலு.
41. சந்துவா - நெய் மற்றும் மைதா கலந்த தட்டை இனிப்பு



பால் மற்றும் பாயச வகைகள் (Milk & Milk Products)

42. கோபால வல்லப - காலை வழிபாட்டின் போது படைக்கப்படும் பால், பேரீச்சம்பழம், தேங்காய், வெண்ணெய் கலவை.
43. ரசபாலி - பாலில் ஊறவைத்த பனீர் வடை போன்ற இனிப்பு.
44. ரப்தி - சுண்டக்காய்ச்சப்பட்ட பால் இனிப்பு (Basundi போன்றது).
45. பாயசம் - அரிசி மற்றும் பால் சேர்த்த பாயசம்.
46. கிரி - தடிமனான பால் பாயசம்.
47. சனா தாடியா - பனீர் கொண்டு செய்யப்படும் இனிப்பு.
48. பியூஷ் - அமிர்தம் போன்ற பால் கலவை.
49. மில்க் கேக் / போடா பிதா - அரிசி மாவு, பனீர், வெல்லம் சேர்த்து சுடப்படும் கேக் போன்ற உணவு

இதர உலர் பிரசாதங்கள் (Savories & Side Dishes)

50. மரிசா மகாபிரசாத் - மிளகு தூவப்பட்ட பிரசாதம்.
51. கடுகி - ஒரு வகை உலர் காரப்பலகாரம்.
52. ஜிஞ்சர் டோஸ் - இஞ்சி மற்றும் வெல்லம் கலந்த பானம் / கலவை.
53. ஹம்சபிலா - பாரம்பரிய முறையில் தயாரிக்கப்படும் ஒரு வகை தொடுகறி.
54. முண்டியா - உலர் மாவு உருண்டைகள்.
55. தங்கபடோ - ஒரு வகை உலர் பலகாரம்.
56. டங்கா தோராணி (Tanka Torani): மகாபிரசாத அன்னம் சமைத்த கஞ்சித் தண்ணீருடன் தயிர், எலுமிச்சை இலை, இஞ்சி, சீரகம் மற்றும் உப்பு சேர்த்து தயாரிக்கப்படும் ஒரு புகழ்பெற்ற புனித பானம் ஆகும்.

இது ஜெகந்நாதர் ஆலயத்தில் மிகவும் விசேஷமாகப் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

# வாழ்க்கையில் மிகப்பெரிய சொத்து ஆரோக்கியம் மட்டுமே!



சென் தாவோமிங் என்ற மேல்நாட்டு அறிஞர் குறிப்பிடும் போது, “என்னிடம் ஓய்வூதியம் பற்றி பேசாதீர்கள். பிள்ளைகளின் பாசம் பற்றியும் பேசாதீர்கள். ஒரு கசப்பான உண்மையைச் சொல்கிறேன். முதுமைக் காலத்தில் உங்கள் மகிழ்ச்சி, நீங்கள் எத்தனை ஆண்டுகள் தானாகவே படுக்கையிலிருந்து எழுந்து, கழிவறைக்குச் சென்று வர முடிகிறதோ அதைப் பொறுத்தே இருக்கிறது.”

ஒருமுறை படுக்கையிலேயே முடங்கிவிட்டால், நீங்கள் உங்கள் வாழ்க்கையின் முழு சுதந்திரத்தையும் இழக்கிறீர்கள். அப்போது நீங்கள் வெறும் உயிருடன் இருக்கும் ஒருவராக மட்டுமே மாறிவிடுகிறீர்கள்.

அப்போது யாரை நம்ப முடியும்? உங்கள் பிள்ளைகளையா பராமரிப்பாளர்களையா? உதவியாளர்களையா? உங்களை நீங்கள் நேசிப்பது போல் வேறு யாரும் உங்களை நேசிக்க முடியாது.

நாம் எண்பது வயதில் இருக்கும் நம்மைப் பற்றி சிந்தித்ததுண்டா?

காலையில் எழும்போது, உங்கள் கைகளும் கால்களும் இன்னும் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்குமா?

படுக்கையிலிருந்து கழிவறை வரை சில அடிகள் நடப்பதற்கே மூச்சுத் திணறலா? அல்லது எளிதாக நடந்து செல்ல முடியுமா?

அந்த நாள் வந்தபோதுதான் உண்மையை உணர்வீர்கள். மரியாதை, சுயநிறைவு, சுதந்திரம், தேர்வு செய்யும் உரிமை, மனநிம்மதி ரு இவை அனைத்தும் இயங்கும் உடலைச் சார்ந்தவையே.

நீங்கள் தானாகவே புரண்டு படுக்க முடிந்தால், பிறர் உதவிக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் தனிமரியாதையும் பாதுகாக்கப்படும்.

நீங்கள் தானாகவே ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்துக் குடிக்க முடிந்தால், தாகத்துடன் யாராவது வருவார்களா என்று காத்திருக்க வேண்டியதில்லை.

நீங்கள் ஜன்னலருகே சென்று வெளி உலகத்தைப் பார்க்க முடிந்தால், மேல்தளத்தை மட்டும் பார்த்துக்கொண்டு நாட்களை எண்ணிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

நீங்கள் ஜன்னலருகே சென்று வெளி உலகத்தைப் பார்க்க முடிந்தால், மேல்தளத்தை மட்டும் பார்த்துக்கொண்டு நாட்களை எண்ணிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

அப்போது ஒரு உண்மை தெளிவாக புரியும்.

பணம் முக்கியம். ஆனால் அது உண்மையான அன்பையும் பராமரிப்பையும் வாங்கித் தர முடியாது. அதிகாலை மூன்று மணிக்கு உங்களைத் தானாகத் திரும்பிப் படுக்க வைக்கும் உடல் வலிமையையும் வாங்கித் தர முடியாது.

பிள்ளைகளின் பாசம் மிகவும் மதிப்புமிக்கது. ஆனால் அவர்களுக்கும் அவர்களுடைய வாழ்க்கை இருக்கிறது. குடும்பப் பொறுப்புகள், வேலை, குழந்தைகள், கடன்கள் என பல சுமைகள் இருக்கும். அவர்கள் நேரம் ஒதுக்கி உங்களைப் பார்க்க வந்தாலே அது அவர்களால் இயன்ற மிகப் பெரிய அன்பாகும்.

எப்போதும் உங்களுடன் இருப்பது உங்கள் உடல்தான். அது நன்றாக இருந்தால், உங்கள் வாழ்க்கையின் எஜமானராக நீங்கள் இருப்பீர்கள். அது செயலிழந்துவிட்டால், உங்கள் உலகமே ஒரு படுக்கையின் அளவுக்கு சுருங்கிவிடும்.

இது எதிர்மறையான சிந்தனை அல்ல. இது வாழ்க்கையின் மிகத் தெளிவான உண்மை.

முதுமைக் காலத்தில் உண்மையான மகிழ்ச்சி


என்றால் தானாக எழுந்து, கழிவறைக்குச் சென்று, சூரிய ஒளியில் சில அடிகள் நடந்து செல்லும் திறன் இருப்பதுதான்.

எனவே, இன்றிலிருந்தே உங்கள் உடலை உங்கள் வாழ்நாள் நண்பனாகவும், மிக நம்பிக்கைக்குரிய துணையாகவும் கருதி பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நன்றாகத் தூங்குங்கள்.

இன்றைய கவலைகளை இன்றோடு முடித்துவிடுங்கள்! மனம் சோர்ந்தால் அதை அடக்கி வைக்காதீர்கள். சிறிது நடந்து வாருங்கள். இசை கேளுங்கள். அல்லது அமைதியாக சிறிது நேரம் அமருங்கள்.

வாழ்க்கையில் நாம் சண்டையிடுவது, போட்டியிடுவது, கோபப்படுவது, கவலைப்படுவது இவை அனைத்தும் தானாக கழிவறைக்குச் செல்லும் திறனுடன் ஒப்பிடும்போது மிகச் சிறியவிஷயங்களே.



இது எதிர்மறை சிந்தனை அல்ல. இது மிக உயர்ந்த நேர்மறை சிந்தனை. எதிர்காலத்தைப் பற்றிய கவலைகளை, இன்றே செயலாக மாற்றச் சொல்லும் அறிவுரை இது.

உடலை வலுப் படுத்துங்கள். உடல் உறுதியை பாதுகாத்துக் கொள்ளுங்கள். மன அமைதியை வளர்த்துக் கொள்ளுங்கள்.

முதுமைக் காலத்தில் நீங்கள் உங்களுக்கே தரக்கூடிய மிகப் பெரிய பரிசு பணக்குவியலோ, பெரிய வீடோ அல்ல.

சூரிய ஒளியில் நடக்கக்கூடிய உடல், தென்றலை உணரக்கூடிய மனம், மலர்கள் மலர்வதை ரசிக்கக்கூடிய கண்கள், எந்தச் சூழலிலும் அமைதியாக இருக்கக்கூடிய உள்ளம் இதுவே மிகப் பெரிய செல்வம்.

இந்த வலிமையை யாராலும் உங்களுக்குக் கொடுக்க முடியாது. நாள்தோறும் உங்களை நீங்கள் அன்புடன் கவனித்துக் கொண்டால் மட்டுமே இந்த அரிய பரிசை உங்களுக்கே வழங்க முடியும்.

படுக்கையிலேயே முடங்கிய பிறகு இதை உணர வேண்டாம்.

வாழ்க்கையின் மிகப் பெரிய சொத்து பணமோ, பிள்ளைகளோ அல்ல; தானாக எழுந்து நிற்கும் உடல் ஆரோக்கியம் தான்.

அனுப்பியவர்:ராயபுரம் குருசாமி


# மித்ரா டைம்ஸ்

## சந்தா தொகை அனுப்பி விட்டீர்களா!

**சந்தா செலுத்துபவர்களுக்கு சிறப்பு சலுகையாக...**

**மித்ரா டைம்ஸ் இதழுடன்...**

**பெண் உலகம், மித்ரா பிக்சர்ஸ் நியூஸ்**

**ஆகிய இரண்டு இணைப்பு இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.**

**சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமே இந்த சிறப்பு சலுகை**

**3 ஆண்டு சந்தா : 900/-**

**6 ஆண்டு : சந்தா: 1500/-**

**தொடர்புக்கு: சந்தா மேலாளர் 9003107102**

# 'சொத்து...?'

வெற்றி ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் அவன் வாழ்க்கை சாதாரணமாக இல்லை. ஏழ்மையை பார்த்தவன். பசியை பார்த்தவன். ஆசைகளை அடக்கிக் கொண்டு வாழ்ந்தவன். ஆனால் அவன் பெற்றோர் ஒருநாளும் "நம்ம பிள்ளை படிக்க வேண்டாம்" என்று நினைத்ததில்லை. தந்தை ராமசாமி அரசு அலுவலகத்தில் குறைந்த சம்பளத்தில் வேலை பார்த்தார். தாய் கமலா வீட்டில் சிக்கனமாக குடும்பத்தை நடத்தினார். மாத சம்பளம் வந்த முதல் நாளே வீட்டு வாடகை, மின்கட்டணம், அரிசி, மளிகை, பிள்ளைகளின் பள்ளிக் கட்டணம் என்று ஒவ்வொரு ரூபாயும் எங்கே செல்கிறது என்று கணக்குப் பார்த்து செலவு செய்வார்கள். பண்டிகை வந்தாலும் புதிய ஆடை வாங்காமல் இருந்த நாட்கள் இருந்தன. ஆனால் பள்ளிக் கட்டணம் மட்டும் ஒருநாளும் தாமதிக்கவில்லை. வெற்றிக்கு நல்ல புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தார்கள். டியூஷன் செல்ல வேண்டிய நேரத்தில் தந்தை தனது தேவைகளைத் தள்ளி வைத்து அவனை அனுப்பினார்.

தாயோ பல இரவுகள் தன் வயிற்றை காலியாக வைத்துக் கொண்டு பிள்ளைகள் சாப்பிட்டார்களா என்பதைத்தான் பார்த்தார். "நாங்கள் சேர்க்கும் நிலம் நாளை போய்விடலாம்... ஆனால் படிப்பு ஒருபோதும் போகாது" என்பதுதான் அவர்களின் நம்பிக்கை. அதே வீட்டில் வெற்றியின் அக்காவுக்கும் நல்ல படிப்பு கொடுத்து, திருமணமும் மரியாதையாக செய்து வைத்தார்கள். அதற்காக பல வருடங்கள் சேமித்த பணமும் கடனாகி விட்டது.

இருந்தாலும் பிள்ளைகளின் முகத்தில் சிரிப்பு இருந்தால் போதும் என்று வாழ்ந்தார்கள். வெற்றி அந்த அன்பை உணர்ந்தவனாக வளர்ந்தான். பள்ளியில் முதல் மாணவன். கல்லூரியில் உதவித்தொகையுடன் படித்து நல்ல நிறுவனத்தில் வேலை கிடைத்தது. உழைப்பால் உயர்ந்தான். சில ஆண்டுகளில் ஒரு வீடு வாங்கினான். பிறகு ஒரு கார் வாங்கினான். பெற்றோர்களையும் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், அவர்கள் ஊரில் அமைதியாக வாழ விரும்பியதால் அவர்களது விருப்பத்தையே மதித்தான். மாதம் தோறும் அவர்களுக்குப் பணம் அனுப்புவான். அவர்களின் உடல்நலத்தையும் கவனிப்பான். வாழ்க்கையில் அவனுக்கு இருந்த ஒரே கனவு, மனைவியும் பிள்ளைகளும் எந்தக் குறையும் இல்லாமல் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதுதான்.

நித்யா வசதியான குடும்பத்தில் பிறந்தவள். அவளது தந்தை முரளி ஒரு தொழிலதிபர். தாய் சுசிலா நகை, ஆடை, உறவினர் நிகழ்ச்சிகள் என்று வெளிப்படையாக வளமாக வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். நித்யாவுக்கு சிறு வயதிலிருந்தே எதைக் கேட்டாலும் கிடைத்தது. பிறந்தநாள் என்றால் தங்கச் செயின். தேர்வில் நல்ல மதிப்பெண் என்றால் வளையல். கல்லூரி முடிந்ததும் ஸ்கூட்டி. திருமணத்திற்குப் பல பவுன் நகைகள். ஆனால் அவள் ஒரு விஷயத்தை மட்டும் கவனிக்கவில்லை. அவளது தந்தையும் பகலிரவு பாராமல் உழைத்தார். பல வருடங்கள் கடன் சுமந்தார். தாயும் தன் ஆசைகளைத் தள்ளி வைத்து குடும்பத்தை உயர்த்தினார். வசதி என்பது ஒரே நாளில் வரவில்லை. பல வருட உழைப்பின் பலன் அது. ஆனால் அந்த உழைப்பின் வலியை நித்யா முழுமையாக உணரவில்லை. அவள் கண்களுக்கு தெரிந்தது இறுதியில் கிடைத்த வசதிதான். திருமணத்திற்குப் பிறகு வெற்றி தனது முழு மனதையும் குடும்பத்திற்காக அர்ப்பணித்தான். மனைவிக்கு தேவையானதை வாங்கித் தர முயன்றான். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சேமித்தான். வீட்டுக் கடன் கட்டினான். கார் கடன் கட்டினான். பெற்றோரையும் கவனித்தான். ஆனால் நித்யாவுக்கு மனநிறைவு என்றதே இல்லை. எவ்வளவு கொடுத்தாலும் இன்னும் வேண்டும் என்ற எண்ணம்தான் அதிகம். அவளது தோழிகள் யாராவது புதிய வீடு வாங்கினால் அதையே வீட்டில் பேசுவாள். யாராவது வெளிநாடு சென்றால் அதையும் ஒப்பிடுவாள். யாராவது அதிக நகை அணிந்திருந்தால் அதையும் எடுத்துச் சொல்வாள். "உங்க அப்பா அம்மா என்ன சேர்த்து வச்சாங்க? இந்த ஒரு வீடு தான் இல்லையா? என் தோழிகளோட வீட்டுல ஏக்கர் ஏக்கரா நிலம் இருக்கு. நமக்கென்ன? ஊர்ல ஒரு வீடு, இங்க ஒரு வீடு. அதுவும் கடன்ல வாங்கினது. உங்க அப்பா சின்ன வயசுல இருந்து சம்பாதிச்சு என்ன பண்ணாரு?" என்று அடிக்கடி கேட்பாள்.

வெற்றி ஆரம்பத்தில் சிரித்தபடியே சமாளித்தான். "அந்த காலத்துல சம்பளம் வேற மாதிரி இருந்துச்சு நித்யா... அக்காவை கல்யாணம் பண்ணி வச்சாங்க... என்னை படிக்க வச்சாங்க... அதுவே பெரிய விஷயம்." ஆனால் அவள் விட மாட்டாள். "அது எல்லாரும் செய்வாங்க... அதுக்காக சொத்து சேர்க்கக் கூடாதா?" இப்படியே பல வருடங்கள் சென்றன. ஒவ்வொரு முறையும் அவன் அமைதியாக இருந்தான். காரணம் சண்டையை விட குடும்ப அமைதியே அவனுக்கு முக்கியம். ஒருநாள் உறவினர் திருமணத்திற்கு செல்ல தயாரானார்கள். நித்யா பட்டுப் புடவை அணிந்து கண்ணாடி முன் நின்றாள். கழுத்தில் செயின். காதில் ஜிமிக்கி. கையில் சில வளையல்கள். சில வருடங்களுக்கு முன்பு வீட்டுக் கடனுக்காக அவளது சில வளையல்களை அடகு வைத்திருந்தான் வெற்றி.

அதைப் பார்த்தவுடன் அவள் முகம் சுளித்தாள். "பாருங்க... உங்களால எனக்கு கை நிறைய வளையல் கூட போட முடியல. எங்க அப்பா அம்மா போட்ட வளையலெல்லாம் அடகு வச்சுட்டீங்க. இப்போ இதுதான் இருக்கு. கல்யாணத்துக்கு போறவளா தெரியுதா?" வெற்றி மெதுவாகச் சொன்னான். "இதுவே அழகா இருக்கு நித்யா. இந்தப் புடவைக்கு ஒரு செயின்... ரெண்டு வளையல்... அதுவே போதும். அந்த ஒரு வார்த்தை கூட அவளுக்கு திருப்தி தரவில்லை.

"உங்களுக்கு சொல்ல சுலபம். உங்க அப்பா அம்மா உங்களுக்கு என்ன சேர்த்து வச்சாங்க? வேலை இருந்ததால்தான் எங்க அப்பா உங்களுக்கு பொண்ணு கொடுத்தாரு. இல்லேன்னா யாரு கொடுத்திருப்பாங்க?"

அந்த ஒரு வாக்கியம் வெற்றியின் உள்ளத்தை நொறுக்கிவிட்டது. பல வருடங்களாக அடக்கி வைத்திருந்த வேதனை அந்த நொடியில் வெடித்தது.

"வாய மூடுறியா?" என்று முதல் முறையாக குரல் உயர்த்தினான். வீட்டில் அமைதி நிலவியது. "கல்யாணம் ஆன நாள்ல இருந்து இன்றுவரைக்கும் நீ கேட்கிற ஒரே கேள்வி... எங்க அப்பா அம்மா என்ன சேர்த்து வச்சாங்கன்னு. இப்போ நான் சொல்றேன்... நல்லா கேள். எங்க அப்பா அம்மா எனக்கு சந்தோஷமான குழந்தைப் பருவத்தை சேர்த்து வச்சாங்க. நல்ல உடல் ஆரோக்கியத்தை சேர்த்து வச்சாங்க. பசியோட படுக்க விடாம சத்தான சாப்பாடு கொடுத்தாங்க. நல்ல பள்ளியில் படிக்க வைத்தாங்க. ஒழுக்கம் கற்றுக் கொடுத்தாங்க. பெரியவங்களை மதிக்கணும்னு சொல்லிக் கொடுத்தாங்க. கஷ்டப்பட்டு சம்பாதிக்கணும்னு சொல்லிக் கொடுத்தாங்க. பிறர் பொருளை ஆசைப்படக் கூடாதுன்னு சொல்லிக் கொடுத்தாங்க. மனைவியை மதிக்கணும்னு சொல்லிக் கொடுத்தாங்க. அதனால்தான் இத்தனை வருஷமா நீ என்னை எவ்வளவு காயப்படுத்தினாலும் நான் அமைதியா இருந்தேன். அந்த பொறுமை கூட எங்க அப்பா அம்மா சேர்த்து வைத்த சொத்துதான். அது உனக்கு கண்ணுக்கு தெரியாது. உணர்ந்தா மட்டும்தான் புரியும்."



நித்யா பேச முடியாமல் நின்றாள். வெற்றி தொடர்ந்தான். "நீ சொல்ற நிலம்... நகை... வீடு... அது எல்லாம் இருந்தா நல்லது. ஆனா அதைவிட பெரிய முதலீடு பிள்ளைகளோட வாழ்க்கை. எங்க அப்பா அம்மா காசை என் மேல இன்வெஸ்ட் பண்ணாங்க. அதனால்தான் நான் இன்னைக்கு நல்ல வேலையில இருக்கேன். என் கால்ல நிக்கறேன். இந்த வீடும், காரும், இன்றைய வாழ்க்கையும் அதோட பலன். அவர்கள் எனக்கு பணத்தை வைக்கல... என்னை உருவாக்கி வச்சாங்க. அதுதான் உலகத்திலேயே பெரிய சொத்து." அவ்வளவு சொல்லிவிட்டு கதவை சத்தமாக மூடி வெளியே சென்றான். வீட்டில் ஒரு கனமான அமைதி.

அந்தச் சம்பவம் முழுவதையும் இரண்டு குழந்தைகளும் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் கண்களில் பயம் தெரிந்தது. அந்தப் பார்வை நித்யாவின் மனதைத் துளைத்தது. அவள் மெதுவாக சோபாவில் அமர்ந்தாள். நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. தன் தந்தையும் இளமையில் எவ்வளவு கஷ்டப்பட்டார் என்று தாய் சொல்லியிருந்ததை நினைத்தாள். ஆரம்பத்தில் வாடகை வீட்டில் இருந்த நாட்கள். கடன் வாங்கி தொழில் தொடங்கிய காலம். தாய் பழைய புடவையைத் தைத்து மீண்டும் அணிந்தது. தந்தை இரவு நேரம் கூட வேலை பார்த்தது. அந்த உழைப்பின் பலன்தான் இன்று தாங்கள் அனுபவித்த வசதி. அதுபோலவே வெற்றியின் பெற்றோரும் தங்களால் முடிந்ததைச் செய்திருக்கிறார்கள். குறைந்த சம்பளத்தில் குடும்பத்தை நடத்தி, மகளை திருமணம் செய்து வைத்து, மகனை படிக்க வைத்து, நல்ல மனிதனாக வளர்த்திருக்கிறார்கள். அவர்கள் சேர்க்க முடியாததை இன்று குறை கூறுவது எவ்வளவு தவறு என்பதை அவள் உணர ஆரம்பித்தாள்.

"பத்தாயிரம் சம்பளம் வாங்குறவனுக்கு அதற்கேற்ற செலவு இருக்கும். ஒரு லட்சம் சம்பளம் வாங்குறவனுக்கும் அதற்கேற்ற செலவு இருக்கும். ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒவ்வொரு சூழ்நிலை. அப்போ இருந்த வாழ்க்கையை இப்போ இருக்கிற வாழ்க்கையோட ஒப்பிட முடியாது. பெற்றோர்கள் எல்லோரும் ஒரே மாதிரி சம்பாதிக்க முடியாது. ஆனால் நல்ல பிள்ளைகளை உருவாக்க முடியும். அதுதான் உண்மையான சொத்து..." என்று அவள் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

அந்த மாலை வெற்றி வீடு திரும்பியபோது, நித்யா அமைதியாக அவன் அருகில் வந்து நின்றாள். கண்ணீர் வழிந்தது. "என்னை மன்னிச்சிடுங்க... நான் இதுவரைக்கும் நகையையும் சொத்தையும் தான் பெரியதுன்னு நினைச்சேன். நல்ல மனிதனாக உங்களை உருவாக்கின உங்க அப்பா அம்மாவை நான் புரிஞ்சுக்கவே இல்ல. இனிமேல் அவர்களைப் பற்றி ஒரு தவறான வார்த்தையும் பேச மாட்டேன். நம்ம பிள்ளைகளுக்கும் இதே மதிப்புகளைக் கற்றுக் கொடுப்போம்." வெற்றி எதுவும் பேசவில்லை. மெதுவாக அவளது கையைப் பிடித்தான். அந்தப் பிடிப்பில் கோபம் இல்லை. மன்னிப்பு மட்டுமே இருந்தது. அந்த நாளிலிருந்து நித்யா மாறினாள். ஒப்பீடுகளை நிறுத்தினாள். நன்றியுணர்வை கற்றுக்கொண்டாள். குழந்தைகளிடம், "தாத்தா பாட்டி உங்க அப்பாவுக்கு பணம் வைக்கலை... அதைவிட பெரிய வாழ்க்கையை வச்சுட்டுப் போனாங்க," என்று பெருமையாகச் சொல்ல ஆரம்பித்தாள். பணம், நிலம், நகை, வீடு இவை எல்லாம் ஒரு தலைமுறைக்கான சொத்து. ஆனால் நல்ல உடல்நலம், உயர்ந்த கல்வி, ஒழுக்கம், பொறுமை, மனிதநேயம், தன்னம்பிக்கை, உழைக்கும் பழக்கம் ஆகியவற்றை பிள்ளைகளுக்கு வழங்கும் பெற்றோர்கள் சேர்த்து வைப்பது தலைமுறைகளை வாழ வைக்கும் அழியாத சொத்து. அந்தச் சொத்தின் மதிப்பை உணராதவர்கள்தான் பெற்றோர்களின் தியாகத்தை குறை கூறுவார்கள்; உணர்ந்தவர்கள் மட்டும் அவர்களின் காலடியில் வாழ்க்கையின் மிகப்பெரிய செல்வத்தை காண்பார்கள்.

**பொள்ளாச்சி முத்துராஜ்**

# எம் பதில்கள்

**பின்னணிப் பாடகி ஜமுனா ராணி மறைவு குறித்து..**

பொ.வேலாயுதம் திருவாலங்காடு

"நான் சிரித்தால் தீபாவளி" என்ற பாடல் அந்த நாளில் வானொலியிலும் இந்த நாளில் தொலைக்காட்சியிலும் பார்க்கும் போது தீபாவளியை ஞாபகப்படுத்தும் ஜமுனா ராணியின் குரல்.

மே 17, 1938 அன்று ஆந்திராவில் பிறந்த இவர் சிறு வயதிலேயே தனது இசைப் பயணத்தைத் தொடங்கி, தனது 7 வது வயதில் திரைத்துறையில் பாடத் தொடங்கினார்.

ஜூலை 30, 2026 தனது 88 வது வயதில் மறையும் வரை ஏறத்தாழ 6000 பாடல்களை பாடி உள்ளார்.

இந்தியா முழுக்க கொண்டு சேர்த்த பாடல் சி.ஆர். சுப்பராமனின் இசையில் 'தேவதாஸ்' படத்தில் சின்ன வயது பார்வதிக்காக இவர் பாடிய 'ஓ தேவதாஸ்' பாடல்தான். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்கள மொழிகளில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களை அவர் பாடியிருக்கிறார்.

இந்த பாடல்களை தவிர 'தெய்வப் பிறவி'யில் 'தாரா தாரா வந்தாரா', 'காளை வயசு கட்டான சைசு களங்கமில்லா மனசு', மன்னாதி மன்னனின் 'நீயோ நானோ யார் நிலவே' 'பாசமலரி'ல் 'பாட்டொன்று கேட்டேன்' ஆகிய பாடல்களும் ஜமுனாராணியின் திறமைக்கு உதாரணம். 'உத்தம புத்திரன்' படத்தில் இடம் பெற்ற, இன்றும் பலரால் விரும்பி கேட்கப்படும் 'யாரடி நீ மோகினி' பாடலை ஜி. ராமநாதனின் இசையில் டி.எம்.எஸ் ஜிக்கியுடன் இணைந்து ஜமுனா பாடியுள்ளார்.



ஏற்கனவே எஸ். ஜானகி மறைந்த சோகம் ஆறும் முன்னே இது ஒரு சோகமாக அமைந்துவிட்டது. தமிழ் திரை உலகுக்கு பேரிழப்பு இது.

**2. ஊக்கப்படுத்தினால் மாணவர்கள் உற்சாகமாவார்கள் என்று உண்மைதானே!**

மன்னை. ரமேஷ்

இதற்கு உங்கள் கருவாக்குறிச்சி ஊரில் இருக்கின்ற அரசு பள்ளியே உதாரணம். அதன் தலைமை ஆசிரியர் திரு .கலை பாரதி அவர்களும் அவருடன் சேர்ந்து மற்ற ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தரும் உற்சாகத்தால் மாநில அளவில் போட்டிகளை வெற்றி பெற்று வருகிறார்கள்.

இதைப்போலவே நாகர்கோவில் அனந்தநாடார்குடி அரசு மேல்நிலைப்பள்ளியின் தாவரவியல் ஆசிரியை மலர்விழி, தன்னுடைய மாணவி மகிழா 12ஆம் வகுப்பு உயிரியல் பாடத்தில் 90 மதிப்பெண்கள் திருவனந்தபுரம் ஐதராபாத் சென்னை வழியாக விமானப் பயணம் மாணவியின் கல்வி ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியை மலர்விழி தனது சொந்த செலவில் அவரை அழைத்துச் சென்று உற்சாகப்படுத்தினார்.

தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினால் மட்டுமே மாணவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். மாறாக புத்திமதி அட்வைஸ் இதெல்லாம் அவர்கள் காதில் ஏறுவதே இல்லை.

**காவிரி பிரச்சனை அவ்வப்போது தலை தூக்குகிறதே?**

ஆர். சந்தானம் கடலூர்.

எந்த ஆட்சி வந்தாலும் மனிதன் மாறாமல் எந்த பிரச்சினை மாறாது. குறிப்பாக நதிநீர் பிரச்சனை பல வருடங்களாக இருந்து வருகிறது. இதை மத்திய



அரசுகள் ,மாநில அரசுகள், நீதிமன்றங்கள் என்று பல்வேறு அமைப்புகள் தீர்வு காண்பதற்கு முயற்சி எடுத்தாலும் ஒரு கட்டத்துக்கு மேல் அது நகர்வதே இல்லை. ஆனால் இயற்கை எப்போதும் மனிதனுக்கு துணையாக இருந்து வருகிறது என்பதுதான் உண்மை. தற்போது

த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு மேகதாது அணை குறித்து பேசுவதற்காக பெங்களூர் செல்ல இருக்கிறார் என்ற ஒரு செய்தி பத்திரிகைகளில் வந்தது. ஆனால் அவர் போகக்கூடாது என்று முன்னாள் முதலமைச்சர் மு .க. ஸ்டாலின், பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் உட்பட பலர் வலியுறுத்தினர். முதலில் நீங்கள் வாங்க பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று கர்நாடக முதலமைச்சர் சிவகுமார் ஒப்புக்கொண்டு அழைப்பு விடுத்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கன்னட அமைப்புகள், குறிப்பாக வாட்டள் நாகராஜ் தலைமையிலான அமைப்பு எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் பதட்டமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு



கர்நாடக முதலமைச்சர் சிவகுமார் பெங்களூர் வரவேண்டாம். வந்தால் பதட்டமான சூழ்நிலை ஏற்படும் என்று விஜய்யை கேட்டுக்கொண்டார். இது குறித்து எந்த பதிலையும் முதலமைச்சர் தெரிவிக்கவில்லை. எனவே அவர் போவாரா அதனால் பதட்டம் ஏற்படுமா என்று எல்லோரும் கவலைப்படுகிற நேரத்தில் வழக்கம் போல, இயற்கை கை கொடுத்தது.

தமிழக அரசு கடந்த 28ம் தேதி காவிரி ஒழுங்காற்றுக் குழு கூட்டத்தில் முறையிட்டதை அடுத்து, 15 நாட்களுக்கு தமிழகத்துக்கு விநாடிக்கு 3,500 கனஅடி நீரை திறந்துவிட வேண்டும் என ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டது.

இதை எதிர்த்து காவிரி மேலாண்மை ஆணையத்தில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்தது. கர்நாடகாவின் கோரிக்கையை நிராகரித்த மேலாண்மை ஆணையம், தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு 3,500 கனஅடிநீரை திறந்துவிடுமாறு உத்தரவிட்டது.

இதை கண்டித்து கர்நாடகாவில் கன்னட அமைப்பினர், விவசாய அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக முதல்வர் விஜய்யின் 'ஜனநாயகன்' திரைப்படம் வெளியான திரையரங்குகளை முற்றுகையிட்டனர். பேனர்களை கிழித்ததோடு, கர்நாடகா முழுவதும் ‘ஜனநாயகன்’ திரையிடலை நிறுத்தினர். இயற்கையின் கருணையால் பெய்த மழையினால்

கடல் மட்டத்தில் இருந்து 2,284 அடி உயரத்தில் உள்ள கபினி அணையின் நீரின் அளவு

2,280 அடியாக உயர்ந்தது. இதனால் அணையின் பாதுகாப்பு கருதி, தமிழகத்துக்கு காவிரியில் விநாடிக்கு 5,000 கனஅடி நீர் திறக்கப்பட்டது. அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்ததால் 10,000 கனஅடியாகவும்,பின்னர் விநாடிக்கு 15,000 கனஅடியாகவும் அதிகரிக்கப்பட்டது. இதனால் கர்நாடகாவுடன் தமிழகத்துக்கு ஏற்பட்ட பிரச்சனை தள்ளிப் போயிருக்கிறது.

**திரு.ரவி.ஐ.பி.எஸ். அவர்கள் பேட்டிகளை படிக்கிறீர்களா!**

பகலவன்,பெரம்பூர்

பதவியில் இருக்கும் போது ஏற்படுகின்ற பணி நெருக்கடி அதிகாரிகளை குறிப்பிட்ட வட்டத்துக்குள் நிறுத்தி விடும். ஆனால் அவர்களே ஓய்வு பெற்ற பிறகு முன்னிலும் வேகமாக சமூக பணியாற்றுகிறார்கள். அதற்கு ஒரு சரியான உதாரணம் திரு. ரவி ஐ.பி.எஸ் அவர்கள். இவரது Ravi IPS police Diaries என்ற முகநூல் பக்கத்தில் லட்சக்கணக்கானோர் தொடர்கிறார்கள். இதில் நிறைய பயனுள்ள செய்திகள் அவர் சொல்கிறார். அடுத்த மாதம் முதல் அவரது வீடியோ செய்திகளை நம்முடைய மித்ரா டைம்ஸ் மாத இதழ் வெளியிட இருக்கிறோம்.




வெற்றி என்பது அறிவால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. தன் கவனத்தை ஒருமுகப்படுத்தி, உடனடி இன்பங்களைத் தியாகம் செய்து, நீண்டகால இலக்குகளை நோக்கி தொடர்ந்து உழைக்கும் மன ஒழுக்கம்தான் வெற்றியை உருவாக்குகிறது.

நேரம் ஒருமுறை கடந்துவிட்டால் அதை மீட்டெடுக்க முடியாது. எனவே, ஒவ்வொரு நாளும் நம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும்:

"என் நேரத்தை நான் என் கனவுகளுக்காகச் செலவிடுகிறேனா, அல்லது என் கவனத்தைச் சிதறடிக்கும் தற்காலிக இன்பங்களுக்காக வீணாக்குகிறேனா?"

தன் கவனத்தை கட்டுப்படுத்தக் கற்றவன், தனது வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் கட்டுப்படுத்தக் கற்றுவிடுகிறான். இன்றைய உலகில் அறிவு அரிதானது அல்ல; திறமையும் அரிதானது அல்ல. ஆனால் எல்லாத் திசைதிருப்பல்களுக்கும் நடுவிலும் தனது கவனத்தை ஒருமுகப்படுத்தி, தனது இலக்கை நோக்கி தொடர்ந்து பயணிக்கும் மன ஒழுக்கம்தான் மிகவும் அரிதானதும், விலைமதிப்பற்றதும், வெற்றியை நிர்ணயிக்கும் உண்மையான ஆற்றலுமாகும்.

வாழ்க்கையில் எந்தக் கஷ்டமும் இல்லாமல் வாழ வேண்டும் என்று விரும்புவது பலருடைய மனித இயல்பு. ஆனால் சவால்கள் இல்லாத வாழ்க்கை என்பது வளர்ச்சியற்ற வாழ்க்கையாகவும் மாறிவிடும். தடைகள் இல்லாத இடத்தில் அனுபவம் உருவாகாது; அனுபவம் இல்லாத இடத்தில் முதிர்ச்சியும் உருவாகாது. வாழ்க்கை நமக்குத் தரும் ஒவ்வொரு கஷ்டமும் ஒரு பாடத்தை உள்ளடக்கியது. அந்தப் பாடத்தை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து கற்றுக்கொள்பவர்களே வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள்.

உடல் வலிமையும் மன வலிமையும் ஒரே நாளில் கிடைப்பதில்லை. உடற்பயிற்சி செய்யாமல் உடல் பலம் வராதது போல, சிரமங்களைச் சந்திக்காமல் மன உறுதியும் உருவாகாது. எடையைத் தூக்கும் பயிற்சி தசைகளை வலுப்படுத்துவது போல, கரடுமுரடான வாழ்க்கையின் சோதனைகள் மனதை வலுப்படுத்துகின்றன. அதனால்தான் கஷ்டங்களை வெறுப்பதற்குப் பதிலாக, அவை நம்மை செதுக்கும் வாய்ப்புகள் என்று பார்க்க வேண்டும்.

கடினமாக உழைக்கத் தயாராக இருப்பவர்களுக்கே உண்மையான வெற்றி சொந்தமாகும். உழைப்பிற்கு மாற்று எதுவும் இல்லை. குறுக்கு வழியில் கிடைக்கும் வெற்றி பெரும்பாலும் தற்காலிகமானது. ஆனால் அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பால் பெறப்படும் வெற்றி நிலையான மனநிறைவையும் உண்மையான மரியாதையையும் அளிக்கிறது. கடின உழைப்பு உடல் வலிமையை மட்டுமல்ல, ஒழுக்கம், பொறுப்புணர்வு மற்றும் பொறுமை போன்ற உயர்ந்த பண்புகளையும் வளர்க்கிறது. இப்பண்புகளே மனிதனை மேலும் உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கின்றன.

# சங்கடங்களை மறைக்காமல் சந்திப்போம்!



ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியை நிர்ணயிப்பது புதிய திட்டங்களோ, புதிய விதிமுறைகளோ அல்ல. உண்மையான பிரச்சனையை அடையாளம் கண்டு, அதன் மூலக்காரணத்தைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ற நிரந்தரத் தீர்வை உருவாக்கும் நிர்வாகத் திறன்தான் அதன் வெற்றியைத் தீர்மானிக்கிறது.

ஆனால் நடைமுறையில் பல இடங்களில் இதற்கு நேர்மாறான அணுகுமுறையே காணப்படுகிறது. ஒரு பிரச்சனை குறித்து நீண்ட விவாதங்கள் நடைபெறுகின்றன. பல கருத்துகள் பகிரப்படுகின்றன. ஆனால் இறுதியில் எடுக்கப்படும் முடிவு, அந்தப் பிரச்சனையின் வேரைத் தொடாமல், அதனுடன் தொடர்பில்லாத மாற்றங்களை நோக்கிச் செல்கிறது. இதனால் பிரச்சனையின் தோற்றம் மட்டுமே மாறுகிறது; அதன் அடிப்படைக் காரணம் அப்படியே நீடிக்கிறது.

இதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, முடிவெடுக்கும் செயல்முறையில் சரியான நபர்களின் பங்களிப்பு இல்லாததுதான். ஒரு பிரச்சனையை நாள்தோறும் எதிர்கொண்டு பணியாற்றுபவர்களின் அனுபவமும் நடைமுறை அறிவும் எந்த அறிக்கையையும் விட மதிப்புமிக்கது. ஆனால் பல நேரங்களில் அவர்களிடம் ஆலோசனை கேட்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக, குறைந்த அனுபவம் கொண்டவர்கள் அல்லது பிரச்சனையின் முழுப் பரிமாணத்தையும் அறியாதவர்களின் கருத்துகளே முடிவெடுப்பதில் முன்னுரிமை பெறுகின்றன.

இதன் விளைவாக, பல ஆண்டுகளாக இருந்த பிரச்சனைகள் புதிய பெயர்களுடனும் புதிய நடைமுறைகளுடனும் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன. காரணம், தீர்வு பிரச்சனைக்கு வழங்கப்படவில்லை; அதன் வெளிப்புற அறிகுறிகளுக்குத்தான் வழங்கப்படுகிறது.

இதைப் பார்க்கும்போது, பல நேரங்களில் நோக்கம் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்ப்பதைவிட, அதன் தீவிரத்தையும் கவனத்தையும் தற்காலிகமாக வேறு திசைக்குத் திருப்புவதாகவே தோன்றுகிறது. வெளிப்படையாக ஏதோ ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிந்தாலும், உண்மையான பிரச்சனை அப்படியே நீடிக்கிறது.

ஒரு மருத்துவர் நோயின் அறிகுறிகளை மட்டும் கட்டுப்படுத்தி, அதன் காரணத்தைக் கண்டறியாமல் விட்டுவிட்டால், நோய் மீண்டும் வரும். நிர்வாகத்திலும் இதே உண்மை பொருந்துகிறது. மூலக்காரணத்தைத் தொடாத எந்த நடவடிக்கையும் நிரந்தரத் தீர்வாக இருக்க முடியாது.

தமிழ் திரைப்படங்களில் வரும் "இதுக்கு பருத்தி மூட்டை குடோனிலேயே இருந்திருக்கலாம்" என்ற நகைச்சுவை வசனம் பல நிர்வாக முடிவுகளுக்கும் பொருந்துவதாகத் தோன்றுகிறது. ஏற்கெனவே இருக்கும் குறைகளைச் சரிசெய்வதற்குப் பதிலாக, தேவையற்ற புதிய மாற்றங்களை உருவாக்கும்போது, எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைப்பதில்லை.

ஒரு நிறுவனத்தின் உண்மையான முன்னேற்றம் என்பது புதிய முயற்சிகளின் எண்ணிக்கையில் இல்லை; பழைய பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் திறனில்தான் இருக்கிறது. அனுபவத்திற்கு மதிப்பளித்து, துறைசார் அறிவுக்கு முன்னுரிமை கொடுத்து, பிரச்சனையை நேரில் எதிர்கொண்டவர்களின் கருத்துகளின் அடிப்படையில் முடிவெடுக்கும்போதுதான் மாற்றம் தோற்றத்தில் அல்ல, நடைமுறையில் தெரியும்.

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்!

## அறிவியல் உண்மைகள்



"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று நம் முன்னோர்கள் சொன்னது வெறும் உவமை அல்ல. அதற்குப் பின்னால் அழகான உடலியல் (Physiology) இருக்கிறது.

நாம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் போது, யாராவது நம்மைப் பாராட்டும்போது, பிடித்தவரை திடீரென பார்க்கும்போது அல்லது வெட்கப்படும் நேரத்தில், சில நொடிகளில் நம் முகம் சிவந்து, பளிச்சென்று மலர்ந்துவிடும். இதைத்தான் மருத்துவத்தில் Flushing என்று அழைக்கிறோம்.

இது நடிப்பல்ல. நம் விருப்பப்படி செய்ய முடியாத, உடல் தானாகச் செய்யும் ஒரு இயற்கையான பதில். உணர்ச்சிகளை மூளை முதலில் உணர்கிறது. அந்த தகவலை நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியான Autonomic Nervous System உடலின் பல உறுப்புகளுக்கு அனுப்புகிறது.

அந்தச் செய்தி முகத்தின் மிகச் சிறிய இரத்தக் குழாய்களுக்கு சென்றவுடன், அவை சிறிது விரிவடைகின்றன. இதனால் வழக்கத்தைவிட அதிக இரத்தம் முகத் தோலுக்குச் செல்கிறது. இரத்தம் அதிகமாக வந்ததால் கன்னங்கள், மூக்கு, காதுகள் போன்ற பகுதிகள் இளஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிறத்தில் தெரிகின்றன. இதுவே முகம் மலர்வது.

இதனால்தான் மகிழ்ச்சியான மனிதரின் முகத்தைப் பார்த்தாலே ஒரு புத்துணர்ச்சி தெரிகிறது. இரத்த ஓட்டம் அதிகரிப்பதால் தோலுக்கு அதிக ஆக்சிஜனும் ஊட்டச்சத்துகளும் கிடைக்கின்றன. அதனால் முகம் உயிரோட்டமாகவும், பிரகாசமாகவும் தெரிகிறது.

ஆனால் blushing என்பது மகிழ்ச்சியால் மட்டும் வருவதில்லை. கோபம், பதற்றம், வெட்கம், பயம், காரமான உணவு, மது அருந்துதல், அதிக வெப்பம், காய்ச்சல் போன்ற சூழ்நிலைகளிலும் முகம் சிவக்கலாம். காரணம் வேறுபட்டாலும், அடிப்படை நிகழ்வு ஒன்றுதான் – முகத் தோலுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிப்பது.

அதனால், ஒருவரின் முகத்தைப் பார்த்தே அவர் மனநிலையை ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது. சந்தோஷத்தில் முகம் மலர்வதும், வெட்கத்தில் கன்னம் சிவப்பதும், கோபத்தில் முகம் சிவப்பதும் – இவை அனைத்தும் நம் மூளை, நரம்புகள், இரத்தக் குழாய்கள் இணைந்து செய்யும் அற்புதமான உடலியல் நிகழ்வுகள்தான்.

எனவே, "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது ஒரு பழமொழி மட்டுமல்ல; நம் உணர்ச்சிகளுக்கும், மூளைக்கும், இரத்த ஓட்டத்திற்கும் இடையே இருக்கும் அழகான அறிவியல் உண்மையுமாகும்.

# கனிவான மருத்துவ சேவையில் கண் மருத்துவர் மதுரை ஸ்ரீனிவாசன்!

மதுரை குட்ஷெட் தெருவில், முப்பது வருடத்திற்கு மேற்பட்ட முழுமையான கண் மருத்துவ அனுபவத்துடன், 1999 ஆண்டு முதல் ஸ்ரீராம் சந்திரா கண் மருத்துவமனையை அதிநவீன கண் சிகிச்சை சாதனங்களுடன் கனிவான மருத்துவ சேவையில் ஈடுபட்டு வருபவர் கண் மருத்துவர் டாக்டர் S.சீனிவாசன், MBBS,DO,MNAMS அவர்களை சந்தித்து பேசினோம். அவர் தனது 40வருட அனுபவங்களை நம்மோடு பகிர்ந்துகொண்டார்.

1987 ஆண்டு முதல் கண் மருத்துவராக செயல்பட்டு வருகிறேன்.

1999 ஆண்டில் மதுரை குட்ஷெட் தெருவில் ஸ்ரீ ராம்சந்திரா கண் மருத்துவமனை துவங்கி நல்ல புகழ், பெயரோடு அனைத்து






தரப்பு மக்களின் அமோக ஆதரவோடு செயல்பட்டு வருகிறேன்.

கண்புரை ஆபரேஷன் மட்டும் இதுவரை ஒன்றே கால் லட்சம் பேர்களுக்கு செய்திருக்கிறோம். ஒரு நாளைக்கு நாற்பது, ஐம்பது ஆபரேஷன்கள் செய்கிறோம்.

சிறுவர்கள், சிறுமிகளுக்கு கிட்டப்பார்வை, எட்டப்பார்வை சோதனை செய்து கண் கண்ணாடிகள் தந்து வருகிறோம். கண் கண்ணாடிகளில் இப்போது ஸ்பெஷல் கண்ணாடிகள் வந்துள்ளது. இதனால் பவர் கூடுவதை தடுக்கலாம்.

'ATROPINE' எனும் லோ டோஸ் சொட்டு மருந்து சிறுவர் சிறுமிகளுக்கு தினமும் இரவில் விட தந்து நல்ல பலன் கிடைத்து வருகிறது. கண் பிரஷர் எனும் கண் நீர் அழுத்த நோய்க்கு சிகிச்சைகள் தருகிறோம்.



சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு சர்க்கரையால் விழித்திரையில் பாதிப்பு வருகிறதா என்று பார்க்கிறோம்.

பிபியால் விழித்திரை பாதிப்பு இருக்கிறதா என்று பார்ப்போம்.

வயதானவர்களுக்கு கண்ணில் புதிதாக ரத்த குழாய்கள் வளரும். அதனால் தழும்பு போல் வருவதை பார்க்கிறோம்.

இவை அனைத்திற்கும் தனித்தனி பிரிவுகள் வைத்து சிறப்பு சிகிச்சைகள் அளித்து குணப்படுத்தி வருகிறோம்.

மாறுகண் அறுவை சிகிச்சைக்கு தனிப்பிரிவு வைத்துள்ளோம். என் உடன்பிறந்த சகோதரி டாக்டர் ஜமுனா இதை கவனிக்கிறார்.

கம்ப்யூட்டர், செல்போன் அதிகமாக உபயோகிப்போருக்கு "டிரை ஐஸ்" "ஞ்ஸிசீ ணிசீணிஷி" வந்துவிடும். இதனை கண்டறிய லேட்டஸ்ட்டாக ட்ரை அனலிசஸ் மெஷின் எங்களிடம் வந்துள்ளது. அதன்மூலம் பாதிப்பு கண்டறிந்து தகுந்த சிகிச்சைகளை மருந்துகள், தெரபி மூலம் தந்து வருகிறோம். இதற்கு என்றே தனிப்பிரிவு வைத்துள்ளோம்.

கண்புரைக்கு பெரிய ஓபன் செய்து தையல் போடுவோம். இப்போது 2 மில்லி மீட்டர் சாவி துவாரம் ஒப்பன் செய்து சிபிகிசிளி ணிவிஹிலிமிறிமிசிகிஜிமிளிழி எனும் அதிநவீன சாதனம் மூலம் ஆபரேஷனை பேஷண்டுகளுக்கு செய்து வருகிறோம். இதில் ஊசி கிடையாது. மயக்க மருந்து கிடையாது. அரைமணி நேரத்தில் வீட்டிற்கு சென்று எல்லா வேலைகளையும் பார்க்கலாம். 'சிணிழிஜிஹிஸிமிளிழி' எனும் வேகமாக சிகிச்சை தரும் அதிநவீன கருவியை இதில் பயன்படுத்துகிறோம். இரண்டு ஆபரேஷன் தியேட்டர் இரண்டு மிஷின் இதில் எங்களிடம் உள்ளது.

எங்கள் கண் மருத்துவ சிகிச்சை டீமில் நல்ல திறமை அனுபவமிக்க ஏழு டாக்டர்கள் பணிபுரிந்து பாராட்டும் பெற்று வருகிறோர்கள்.

ஏழை, எளிய மக்கள் இதனால் இலவச சோதனை, சிகிச்கைளால் பெரும் பலனை அடைந்து உள்ளார்கள். மாதம் பதினைந்து முதல் இருபது ஐ கேம்புகள் நடத்தி வருகிறோம். இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவென்றால் ஆஸ்பத்திரியில் செய்வதை போல் அனைத்து அதிநவீன மிஷின்களை வேனில் ஏற்றிச் சென்று கேம்ப் போட்டு எங்கள் ஆஸ்பத்திரிக்கு





வர முடியாவர்களுக்கு தேடிச்சென்று சிகிச்சைகளையுமே வெறும் டெஸ்ட்டோடு நின்று விடாமல் செய்து வருகிறோம். இந்த ஐ கேம்ப்புகளை என்னுடன் திரு.பாபு,திரு.ஜெய செந்தில் இருவரும் முழு பொறுப்பேற்று திருப்தியாக சேவை செய்து வருகிறார்கள்.

தீபாவளி நேரத்தில்,பட்டாசு வெடித்து கண்களில் பயங்கரமான பாதிப்புகள் அடைந்து சிகிச்சைக்கு வரும்போது அது எங்களுக்கு ஒரு சவாலாகவே அமைந்து விடும். கருவிழி கிழிந்துபோய் வருவார்கள். தகுந்த அதிநவீன சிகிச்சைகள் தந்து கண்களை காப்பாற்றி வருகிறோம். ரத்த கசிவோடு வரும் சர்க்கரை நோயாளிகளின் கண்களை சரி செய்வதும் எங்களுக்கு சவாலாக இருந்தாலும் அதையும் குணப்படுத்துவோம். காவல் துறையினருக்கு, ஆட்டோ, லாரி, டாக்ஸி ஓட்டுநர்களுக்கு கன்சல்டிங் பீஸ் வாங்காமல் இலவச பரிசோதனை செய்து வருகிறோம். இருபது வயது இளைஞர்கள், இளம் பெண்கள் கண்ணாடி போட்டு





இருப்பார்கள். கண்ணாடி இல்லாமல் அவர்கள் செயல்பட லேசர் சிகிச்சை தந்து வருகிறோம். “ஸ்மைல்” போன்ற எல்லா சிகிச்சை தரும் கருவிகளும் எங்களிடம் உள்ளது.”

பேட்டியின் நிறைவாக டாக்டரின் எதிர்கால திட்டம் பற்றி கேட்டோம். ஆர்வத்துடன் சொன்னார்..

“புதிய மருத்துவமனை ஒன்றும் கட்டி வருகிறேன். இதில் இளைய தலைமுறை கண் கண்ணாடி ஷாப் வைத்து சம்பாதிக்க கண் டெஸ்ட் பயிற்சி தரும் கல்லூரியும் துவங்க திட்டமிட்டு இருக்கிறேன். கோவில்பட்டி, சிவகங்கை கிளைகள் உள்ளது. மேலும் கிளைகள் அமைக்க திட்டமிட்டு வருகிறேன்.”

இவரது மருத்துவ சேவையை பாராட்டி 'வாழ்நாள் சாதனையாளர்" மற்றும் லயன்ஸ் கிளப், ரோட்டரி சங்கம் வழங்கிய "சிறப்பு மருத்துவர்""சிறப்பு கண் அறுவை சிகிச்சை

POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 August 2026
MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027



மருத்துவர்"என்று பல்வேறு விருதுகளை பெற்றிருக்கிறார். இந்த விருதுகளை விட கனிவான மருத்துவ சேவை கண் மருத்துவப் பணியாற்றும் இவரை ஏழைகள் வாழ்த்துவது தான் மிகப்பெரிய விருதாக இருக்கும். அத்துடன் நமது மித்ரா டைம்ஸ் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். டாக்டர் அவர்களின் கைபேசி எண்கள். 93840 20143, 98949 52181

**பேட்டி, படங்கள்: விஜயா கண்ணன்**

From:

**MITRA TIMES ,Tamil and English monthly 101,Inchakkal Block, Chitra Avenue 9, Choolaimedu High Road, Chennai .600094. 044-23744661,23743007/8. mitratimes2015@gmail.com, www.mitratimes.com**

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY